விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 26 புதன்கிழமை (11.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 235

ராம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

### கட்சியிலிருந்தும் விலக்கல்

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வா பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். மேர்வின் சில்வா தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணை ஒன்றின் பின்னர் அவர் நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டெங்கு ஒழிப்பு நிகழ்வில் பங்குபற்றாத சமுர்த்தி ஊழியர் ஒருவரை மேர்வின் சில்வா கடந்த வாரம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபை செயலருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### ஐ.நா. அதிகாரிகள் திட்டமாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்களினால் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகள் கொல்லப்பட்டமை தொடர்பில் பான் கீ மூன் காத்திரமான நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயரதிகாரிகள், பான் கீ (16 ஆம் பக்கம் பார்க்க)

# இடம்மாறும் ஐ.தே.க. எம்.பிக்கள்;

# ஜனாதிபதி-ரணில் அவசர சந்திப்பு



### இணைக்க வேண்டாம் என வேண்டுகோள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் இணைத்துக் கொள்வது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவசரமாகச் சந்தித்துத் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். இவ்வாறான செயற்பாட்டில் இனி ஈடுபட வேண்டாம் என வலியுறுத்தப்பட்டதாகக் கட்சியின் தவிசாளர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா எம்.பி. தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் விவசாயம் செய்ய அனுமதிக்குக!

### யாழ்.அரச அதிபர், கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் சிக்கியுள்ள நெற்செய்கைக்குரிய வயற்காணிகளில் பெரும்போக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி கத்துருசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள கோரிக்கையில், யாழ்ப்பாணத்தின் பொருளாதார முதுகெலும்பாக விவசாயமே விளங்குகின்றது.

எனினும் மிக நீண்ட காலமாக நிகழ்ந்து வந்தபோர் குடாநாட்டின் விவசாயத் துறையை நலிவுறச் செய்து விட்டது. தற்போது போர் ஓய்வுக்கு வந்து விட்டது.

ஆயினும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீப் ஆற்றில் விழுந்து பொலிஸார் மூவர் பலி

(கொழும்பு)

பொலிஸ் ஜீப் ஒன்று பாதையை விட்டு விலகி கொஸ்வத்த கங்கையில் வீழ்ந்ததால் கரவானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் கம்ஹேவா மற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலியாகினர்.

வெதகல என்னும் இடத்திலிருந்து கல்வானையை நோக்கி அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்தபோது நேற்று மாலை 7 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

ஜீப்பின் சாரதியான மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றில் ஆஜராகி நேற்று லக்ஸ்மன் செனவிரட்ண சாட்சியமளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்ண இராணுவ நீதிமன்றில் ஆஜராகி, ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பில் சாட்சியமளித்துள்ளார்.

கடமையிலிருந்தபோது ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலில் ஈடுபட்டதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் பொன்சேகா அரசியலில் ஈடுபட்டாரா? என்பது தொடர்பில் லக்ஸ்மன் செனவிரட்ண நேற்று (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா கணேசனின் கட்சிப் பதவிகள் பறிப்பு ஒழுங்கு நடவடிக்கைக்கும் அங்கீகாரம்

(கொழும்பு)

அரசுடன் இணைந்து கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தொடர்பில் தலைவர் மனோ கணேசனும் பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரனும் இணைந்து எடுத்துள்ள ஒழுங்கு நடவடிக்கைகளுக்குக் கட்சியின் அரசியல் குழு ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

அதேவேளையில் பிரபா கணேசன் எம்.பி. வகித்து வந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவிக்கு மேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.இராஜேந்திரனும் ஜனநாயகத் தொழிலாளர் (16 ஆம் பக்கம் பார்க்க)



அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் 12.08.2010 முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.

எமது சேவைகள்

- ★ நிலையான வைப்பு
- ★ சேமிப்பு வைப்பு
- ★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
- ★ தவணைக் கடன்
- ★ சொத்து வியாபாரம்
- ★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

(2107)

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124

# பொது அறிவித்தல் (Public Notice)

## Cable TV Operators

SunTv, KTV, Sun Music

ஆகிய செனல்களின் கேபிள் டிவிக்கு வழங்கும் ஏக முகவர்களாக

**LBN**

**Lanka Broadband Network (pvt) Ltd.**

நியமிக்கப்பட்டுள்ளார்கள்

மேற்குறிப்பிட்ட செனல்களை இன்று முதல் (11.08.2010) எங்களின் அனுமதியின்றி DTH அல்லது வேறு வகையில் கேபிள் டிவியில் ஒளிபரப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேலதிக விபரங்களுக்கு :

LBN

**Lanka Broadband Network**
241/32, Kirula Road, Narahenpita, Colombo 05.
Tel: 5 300 300, Fax: 4517220
E-mail: indika@lbn.lk

OR

**Micro World**
136,Dam Street, Colombo 12.
Tel: 2473744, 2478163, Fax: 2478172
Direct: 0777 412483
E-mail: shivacmb@hotmail.com

OR

**Jaffna District Distributor**
A.Dusyanthan
874,Hospital Road, Jaffna.
077 3105921 / 021 5677779 / 0775590493
u.s.guest house@gmail.com

(2141)

---

22.07.2010 முதல்

ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்



குற்றப்பிரிவு

(C-588)

செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

---

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் M.B.B.S டாக்டர் ஆக தொழில் புரியும் 30 வயது மணமகனுக்கு படித்த, அழகிய, நற்குணமுள்ள, மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :-
T.P: 0775568219

(2135)

---

## Open Source Training

MIS

FOSS

- Level 1: Linux desktop essentials
- Level 2: Linux administration
- Level 3: Linux advanced administration
- Level 4: Linux networking & security
- Web development: PHP, MySQL, Apache & Joomla
- Open office.org
- Advanced DBMS using MySQL
- Advanced Programming using Python

100% Knowledge

**For kids**

- Level 1: Open source applications
- Level 2: Linux desktop fundamentals

LAMP

யாழ் நகரில் முதன்முறையாக....

ஆர்வமுள்ளவர்கள் எவரும் படிக்கலாம்

**For Next Generation**

TPNo: 0776577359, 021321 6083
#74, Sabapathy Lane, Thalaiyaali, Pirampady, Jaffna.

---

# யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

BCHS

To Study in UK(London), Canada, Australia, Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

- FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
- FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
- FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

**IELTS** (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

**(We guarantee minimum band 6.0 Upwards)**

**SPOKEN ENGLISH (For School Leavers & Workers)**

இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகிறது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வார நாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

**Diploma in English** | **Advanced Diploma in English**

100 % பயிற்சி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935/0773501499

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 15.08.2010, 18.08.2010, 22.08.2010
காலை : 10.00 மணி
மாலை : 04.00 மணி

---

# நீரிழிவு சிகிச்சையும் PHYSIOTHERAPY சிகிச்சையும்

- நீரிழிவு (DIABETIC) நோயாளர்களுக்கான வைத்தியம், உணவுக் கட்டுப்பாடு, உணவு வகைகள், நீரிழிவு சம்பந்தமான இலவச அறிவுரைகள்.
- நீரிழிவு நோயாளர்களுக்கு மிக முக்கிய இரத்தப் பரிசோதனைகள், தகுதியானவரினால் (MLT) குறைந்த கட்டணத்தில்.
- NONFAT ஆடைநீக்கிய பசுப்பால் முழு நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.
- பக்கவாத நோயினால் (STROKE) பாதிக்கப்பட்டவர்களுக்கான PHYSIOTHERAPY வைத்தியம் WARDல் தங்கியிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- வயோதிபர்களுக்கான பராமரிப்பு (உணவு, வைத்திய ஆலோசனை என்பவற்றுடன்)

**கோபிசாந் கெல்த் சென்ரர்**

191,முதலாம் குறுக்கு வீதி,(வேம்படி மகளிர்கல்லூரிக்கு அருகே) யாழ்ப்பாணம்.

(2142) T.P.: 0779850291

---

| | | | |
|---|---|---|---|
| | புதன் சுக்கிரன் சூரியன் | ராகு | சந்திரன் |
| | ராசி | | லக்கினம் |
| | | | செவ்வாய் |
| சனி | கேது | | |





# ஸ்ரீ விநாயகர் ஜோதிட இடம்

## இந்தியாவின் பிரபல ஜோதிடர்

## கார்த்திக் சுவாமிகள்

அன்பர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளியம்மனின் அருள்கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாக பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல், போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்னை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்றுகூடுதல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தி யோகம், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண்திருஷ்டி இவற்றுடன் எதிர்கால பலாபலன்களை தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.

தொ.பேசி. 0777742747
0777742749

(2138)

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:-
காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

இல,63/1 A,
அங்கலின் கட்டிடம் அருகாமையில்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

No.63/1 A,
NEAR ANGALIN BUILDING,
Grand Bazaar, Jaffna

# இன்று ஒரு தகவல்

## அளவுக்கு மிஞ்சினால்

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்வார்கள். அது உண்மைதான்.

ஒருத்தருக்கு அளவுக்கு மீறிய புகழ் வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அது கூட ஆபத்தாக போய்விடுவதும் உண்டு.

பழங்காலத்தில் கிரேக்கதேசத்தில் ஒரு பழக்கம் உண்டாம். அதாவது யாராவது ஒருத்தரை நாடு கடத்த வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய பெயரை ஒரு மட்பாண்ட ஓட்டுச் சில்லில் எழுதி அதை ஒரு குறிப்பிட்ட பொது இடத்தில் போட்டு விட வேண்டும். இதுபோல் பலர் போட்டுக் கொண்டு இருப்பார்கள். எல்லாம் குவிந்து கிடக்கும்.

அந்த ஓட்டின் மேல் யாருடைய பெயர் அதிகமாக எழுதியிருக்கிறதோ அந்த நபரை பத்து ஆண்டுகள் நாடு கடத்தி விடுவார்கள். அது அந்த ஊர்ப் பழக்கம்.

ஒருநாள் அந்தக் குவியலுக்குப் பக்கத்தில் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். அவனுடைய கையில் ஒரு மட்பாண்ட ஒடு இருந்தது. அதில் யாருடைய பெயரையோ எழுதி அந்த இடத்தில் போட வேண்டுமென்று ஆசை. ஆனால் அவன் படிக்காதவன். அதனால் எழுதத் தெரியவில்லை. யாராவது அந்த வழியாக வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான். ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம் ஓடினான்.

" கையில் இருந்த மட்பாண்டச் சில்லைக்" கொடுத்தான்.

"ஐயா இதில் ஒரு பெயரை எழுதிக் கொடுங்களேன்" என்றான்.

அந்தப் பெரியவர் அதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு "என்ன பெயர் எழுத வேண்டும் சொல்" என்றார்.

இவன் சொன்னான்:

"அரிஸ்டைடிஸ் என்று எழுதுங்கள்" என்றான். இதைக் கேட்டதும் அந்தப் பெரியவருக்கு அதிர்ச்சி. ஏன் தெரியுமா?

அவர் தான் தத்துவமேதை அரிஸ்டைடிஸ். (Aristides) இருந்தாலும் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் அந்த ஆளிடம் கேட்டார்:

"அது சரி... அரிஸ் டைடிஸ் பெயரை எழுதச் சொல்கிறாயே... அவர் உனக்கு என்ன தீமை செய்தார்?" என்று கேட்டார்.

"அவர் எனக்கு எந்தத் தீமையும் செய்யவில்லை. அவரை நான் பார்த்தது கூட கிடையாது" என்றான் அந்த ஆள்.

"அப்படியானால் எதற்காக அவரை நாடு கடத்த வேண்டும் என்று நீ ஆசைப்படுகிறாய்?" என்று கேட்டார் அரிஸ்டைடிஸ்.

அதற்கு அந்த ஆள் சொன்னான்:

"அரிஸ்டைடிஸ்ஸைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். அவர் மிகவும் நல்லவர். அவர் ஒரு பெரிய அறிவாளி, பெரிய வள்ளல் பேரறிஞர் என்றெல்லாம் சொல்கிறார்கள். இதைக் கேட்டு எனக்கு மிகவும் அலுத்து விட்டது. அதனால் தான் வெறுப்பாகி விட்டேன்" என்றானாம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

நாம் நல்லவனாக இருப்பதில் ஒன்றும் இடைஞ்சல் இல்லை. ஆனால் நம்மை நல்லவன் நல்லவன் என்று எல்லோரும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்னால் இடைஞ்சல் ஆரம்பம் என்று அர்த்தம். எதுவுமே மிஞ்சிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

அளவுக்கு அதிகமாக ஆசைப்படாதவர்களில் ஆபிரகாம்லிங்கனும் ஒருவர்.

அவர் ஒருநாள் தன்னுடைய நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தாராம்.

ஒருத்தர் கேட்டிருக்கிறார்:

"ஒரு மனிதனுக்கு கால்கள் எவ்வளவு உயரம் இருக்க வேண்டும்? என்று கேட்டாராம்.

இதற்கு ஆபிரகாம்லிங்கன் சொன்னாராம்:

"அது என்ன... இடுப்பிலிருந்து தரையைத் தொடுமளவுக்கு உயரம் இருந்தால் போதும்" என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பரீட்சை நிலையங்களில் முறைகேடு நடந்தால் உரியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பரீட்சை நிலையங்களில் முறைகேடாக செயற்படுகின்றவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு தோற்ற முடியாத படி வாழ் நாள் தடை விதிக்கப்படுவதுடன் பரீட்சை பெறுபேறுகளை இடை நிறுத்துவதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் பரீட்சை முறைகேடுகள் ஈடுபடும் பட்சத்தில் அவர்களின் சேவைக்காலப்பகுதியில் எந்த வித பரீட்சைக்கும் தோற்றுவதற் கும் அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்பு பட்ட 354 அதிகாரிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடை எழுதுவதற்கான தாளை பரீட்சை நிலையத்தில் இருந்து வெளியில் கொண்டு செல்பவர்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

## நினைவு நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 43,3ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்நினைவு தின த்திற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாமனிதர் குமார் பொன்னம் பலம் ஞாபகார்த்தக் குழு தெரிவித்துள்ளது. (2)

## ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப் பூர தினமான நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு திருமஞ்சன நீராட்டலும் தொடர்ந்து ருதுசாந்தி உற்சவமும் நடைபெறும். (2-4)

## திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையாக தரமுயர்வு

(கொழும்புத்துறை)

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை தேசிய பாடசாலையாக கல்வியமைச்சினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரிதஸ் மேவிஸ் லடிஸ்லாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் முயற்சியினால் யாழ். திருக்குடும்பகன்னியர் மட பாடசாலையில் இருந்து கடந்த வியாழக்கிழமை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (5-51)

# இராசி பலன்

11.08.2010
(ஆடி 26, புதன்கிழமை)
பிரதமை காலை 6.48 மணிவரை
துதியை பின்னிரவு 4.21 மணிவரை
மகம் முன்னிரவு 7.16 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** வாகன யோகத்தால் சுகம் காணும் நாள், தொலைபேசி மூலம் ஆச்சரியமான தகவல் வந்து சேரலாம், முருகப் பெருமான் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**மிதுனம்** குடும்ப பொறுப்புக்களை நிறைவேற்ற முற்படுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பிரயாணத்தின் மூலம் நன்மை கிடைக்கும்.

**கடகம்** இல்லம் தேடி இனிய செய்தி வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள் , உஷ்ணம் தொடர்பான வியாதி ஏற்படலாம்.

**சிங்கம்** மனக்குழப்பம் அகல மாற்று இனத்தவர் உறுதுணை புரிவார்கள் , திடீர் பயணம் உருவாகலாம் , குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கன்னி** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செய்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும் , அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**துலாம்** செல்வநிலை உயரும் நாள் , தொலை தூர பயணம் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம் , மாலை நேரம் இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள் , விருந்தினர் வருகையுண்டு , பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் , பாதியில் விட்ட வேலையை மீண்டும் தொடங்குவீர்கள்.

**தனுசு** மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி கிடைக்கும் , வீண் பழிகள் அகல நல்ல முடிவெடுப்பீர்கள் , தேக ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள்.


**மகரம்** உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் , தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது , அம்மன் வழிபாட்டால் துயரங்கள் தீரும் நாள்.

**கும்பம்** கணவன் மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் , குடும்பத்தினருக்காக புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள் , புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரும்.

**மீனம்** நினைத்த காரியத்தை நிறைவேற்றும் நாள் , அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர் , பழைய பாக்கிகளை வசூலிப்பதில் முன்னேற்றம் காணலாம்.

வளவன்

# பேசும் படம்



சிரிப்பின் பொருள்...

காட்சி - யாழ்.புகையிரத நிலையம்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 70 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 120 | 90 | 70 |
| கரட் | 120 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 30 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 130 | 160 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 80 | 140 | 120 |
| போஞ்சி | 100 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 15-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 90 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 30 | 25 |

# ஈழத்தவர் வரலாறு

01

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

### 01. ஈழநாடும் ஈழத்தவர்களும்

#### I. இலங்காபுரி/ ஈழம்

இலங்கைத்தீவு முழுமைகுமுரிய பெயராக இலங்காபுரி,ஈழம் எனும் பெயர்கள் பண்டைதொட்டு வழங்கி வந்துள்ளன. பல்வேறு பெயர்களினால் இலங்கை பூர்வதகாலந் தொட்டே விளிக்கப்பட்டு வருகின்றபோதிலும் இவ்விரு பெயர்களும் இன்றுவரை நிலைத்து நிற்கும் சிறப்பினைப் பெற்றுள்ளமை குறிப்பித்தக்கது. இலங்காபுரி என்ற பழைய பெயரே இன்றைய லங்கா, இலங்கை என்ற நிரந்தர நாமங்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்காபுரி பற்றிய ஆரம்பக் குறிப்பு



பண்டைய நாணயங்கள்

இராமாயணத்தின் உத்தர காண்டத்தில் வருகின்றது. குபேரனுக்காக விசுவகர்மன் என்ற தேவதச்சனால் அமைக்கப்பெற்ற இலங்காபுரி பின்னர் குபேரனால் இராவணனுக்குக் கையளிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கை என்ற பெயரால் இந்நாடு முழுவதும் இன்றுவரை அழைக்கப்படுவதே இலங்காபுரியின் மங்காத புகழை இன்றும் நிலை நிறுத்துகிறது. மேலைத்தேய நாட்டினர் இந்நாட்டிற் காலெடுத்து வைத்தது. முதலாகவே இலங்கை என்ற பெயர் சைலன் (Zeilan) என்றும் சையிலன் (Sailan) என்றும்சிலோன் (Ceylon) என்றும் திரிவு பெற்று உச்சரிக்கப்படலாயிற்று.

ஈழம் என்ற பெயரால் இலங்கை அழைக்கப்பட்டமையை பண்டைய தமிழ் இலக்கியங்கள், பழைய கல்வெட்டுக்கள், புராதன காசுகள் என்பன உறுதிப்படுத்துகின்றன. பட்டினப்பாலை எனும் சங்க நூலில் 'ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்' என வருகின்ற வரி குறிப்பிடத்தக்கது.திருப்பரங்குன்றப் பிராமிக் கல்வெட்டில் ஈழக்குடும்பிகன் என்பவனது பணிபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்காலத்தில் பாண்டிய கல்வெட்டொன்றில் ஈழம் பற்றிய தகவலுள்ளது.இலங்கையில் அனுராதபுரத்தில் கிடைத்த கல்வெட்டொன்றில் ஈழக் காசுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.இந்த ஈழக்காசுகளே சிங்கள மன்னர் பயன்படுத்திய சுகவனுக் காசுகள் எனக் கருதுவர். எவ்வாறாயினும் இலங்கையின் பிரதான வரலாற்று மூலகங்கள் எதிலும் இதுவரை இலங்கை,ஈழம் என்று அழைக்கப்பட்டதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் முதன் முதலாக ப.புஸ்பரட்ணம் என்பவரால் பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு மட்பாண்டப் பிராமிச் சாசனங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுள் மூன்று எழுத்துக்களைக் கொண்ட முதலாவது சாசனம் பெருமளவு உடைந்து இருப்பதனால் அதனை ஒரு முழுச் சாசனமாகக் கொள்ளமுடியாதிருக்கின்றது. ஆயினும் இதன் முதலிரண்டு எழுத்துக்களிற்கும் 'ஈழ' என்ற ஒலிப் பெறுமானத்தைக் கொடுத்து 'ஈழ' என்று வாசிப்பது பொருத்தமானதாகத் தெரிகின்றது எனப் புஸ்பரட்ணம் குறிப்பிடுகிறார்.இரண்டாவது சாசனம் 'ஈலா' என்ற வாசகத்தைக் கொண்டது.இவை இரண்டும் ஈழத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

ஈழம் என்றால் உலோகக் கட்டிகள்,பொன் எனப் பலவாறாக அர்த்தப்படும்.ஈழம் என்ற பெயர் வந்தமைக்கான காரணத்தை வரலாற்று ஆசிரியர் முதலியார் செ.இராசநாயகம் விளக்கியுள்ளார்.இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் 'எலு' வென்று இக்காலத்தில் பிழைபட வழங்கப்படும் 'ஈழு' வென்னும் நிறைவற்ற பாஷையையே பேசி வந்தார்கள்.அதனால் இலங்கைக்கு 'ஈழம்' என்றும் 'ஈழமண்டலம்' என்றும் பெயர் உண்டாயிற்று. ஈழம்,சீழம் என மருவிச் 'சிஹழம்',சிங்களம் என மாறியது.சீழம் என்ற பெயரிலிருந்த சீழம்தீப் ,சேரண்டிப் எனும் அராபிய நாமங்களும் 'சிலாங்','சிலோன்' என்னும் மேலைத்தேயவரிட்ட பெயர்களும் வந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார். ஈழம் என்ற பெயர் திரிபடைந்து 'சிறீ' என்ற அடைமொழியுடன் சேர்ந்து சீகள என்ற பாளி வடிவமாகவும் சீம்கள என்ற வடமொழி வடிவாகவும் வளர்ச்சியடைந்தது என்பது ஏற்புடைய கருத்தாகுமெனச் சிற்றம்பலம் கருதுகிறார்.

பண்டைய இலங்கையின் வட பெரும் பகுதி நாகதீபம் எனவும், தென்பெரும் பகுதி தம்பண்ணை அல்லது தாமிரபர்ணி எனவும் இரு தெளிவான புவியியல் அலகுகளாக விளங்கின.கதம்பநதி எனப்படும் அருவி ஆற்றுக்கும் நாகபொக்கனை ,திரிகூடம் எனும் பகுதிகளுக்கும் வடக்கேயுள்ள பிரதேசம் நாகதீபம் எனப்பட்டது. நாகதீபத்தில் யாழ்ப்பாணக்குடா நாடு,அதன் அயற்றீவுகள், மன்னார், வவுனியா,முல்லைத்தீவு முதலான பிரதேசங்கள் அடங்கியிருந்தன. கதம்ப நதியையும் மகாவலி கங்கையின் சுழிமுகக் கிளையையும் இணைக்கும் தென்புற வளைகோட்டிற்குத் தெற்கே பரந்து கிடக்கும் இலங்கையின் நிலப்பரப்பு தாமிரபர்ணி எனப்பட்டது.

#### I.1. தாமிரபர்ணி

எனினும் இலங்கைத் தீவின் புகழ்மிக்க பெயராகத் தாமிரபர்ணி மேலைத்தேய/ கீழைத்தேய அறிஞர்கள் பலராலும் தமது ஆவணங்களில் குறிக்கப்பட்டு வந்துள்ளமை கவனிக்கத்தக்கது.இலங்கைத் தீவின் தென்பெரும்பகுதிக்குரிய தாமிரபர்ணி என்ற பெயர் இலங்கை முழுவதற்குமுரிய பொதுப் பெயராக பயின்று வந்தமைக்குரிய காரணிகள் தெளிவானவை.மிகச்சிறந்த கடலோடிகளாக விளங்கியகிரேக்க,ரோம,அராபிய வணிகர்களின் வர்த்தகக் கலங்கள் இந்து சமுத்திரத்தில் பிரவேசித்த போது காற்றினதும் நீரோட்டத்தினதும் மரக்கல உந்துகை கதம்பநதி(அருவியாறு)க்கும் கல்யாணி நதி (களனி கங்கை)க்கும் இடைப்பட்ட தாமிரபர்

தொலமியின் இலங்கை வரைபடம்




ணியின் மேற்குக் கரையோரம் நோக்கியதாக இருந்துள்ளது. எனவே மேலைத்தேயர்கள் அறிந்த பிரதேசமாகத் தாமிரபர்ணி விளங்கியமையால் இத்தீவின் பொதுப்பெயராக அதனைத் தமது தேசப்படங்களிலும், நூல்களிலும் குறித்துப் போயினர்.

கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏராதோஸ் தீனிஸ் , குளோடியஸ் தொலமி ஆகிய இரு வானவியல் புவியியல் அறிஞர்கள் அக்காலகட்டத்தில் வரைந்த தேசப்படங்களில்


கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

இலங்கைத்தீவுகுறிக்கப்பட்டுள்ளது. ஏராதோஸ் தீனிஸ் தனது படத்தில் இலங் கைத் தீவை 'தப்ரோபேன்' எனக் குறித்துள்ளார்.

(தொடரும்)

# உயர்தனிச் செம்மொழி

01



கடல்படை சூழ்ந்த இவ்வுலகின் கண்ணே பயிலுறும் மொழிகள் அனைத்தையும் ஆராய்ந்து வகுத்து அடைவுபடுத்தி நின்ற மொழிநூற் புலவர்கள் அவையிற்றை ஆரியமொழிகள் , துரானிய மொழிகள் என இரு பகுப்பினும் அடக்குவாராயினர். ஆரியமொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ் மொழி தலைசிறந்ததொன்றாம். எனவே சமஸ்கிருதமும் தமிழும் வேறுவேறு மொழிகளென்பது வெள்ளிடை மலையென விளங்கும். ஆகவும் சிலர் தமிழ் முன்னதன் வழிமொழியேயன்றித் தனி மொழியன்றெனவாய் கூசாது கூறுவராயினர்.

சமஸ்கிருதமுந்தமிழும் ஒரே நாட்டின்கண் முறையே வடக்கிலும் தெற்கிலுமாக வழங்கிய காரணம் பற்றி இவ்விரண்டுந் தம்மிற் சில்லாற்றாற் கலப்பனவாயின. அங்ஙனங் கலப்புழி ஒன்று பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டில் நிற்ப, மற்றொன்று இருவகை வழக்கிலும் நின்றமையால் முன்னதன் சொற்பொருட்கள் பல பின்னதன்கட போந்து வழக்கேற்பனவாயின. இது மொழி நூல் முறையே. இதனை பெய்யாதார் கூற்று ஒதுக்கற் பாலதென விடுக்க.

இனி மொழிநூற் புலவர்கள் வகுத்த வகை ஒருபுறமிருப்பச் சிலர் தமிழ்மொழியின் ஏற்றமுணராது மயங்கிப் பிறிதுபட வகுத்தனர். வடமொழியை உயர்தனிச் செம்மொழியினும் (Classical Language) தென்மொழியை உண்ணாட்டு மொழியினும் (Vernacular Languages) அடக்கி வகைப்படுத்தினர். அங்ஙனம் வகைப்படுப்புழி ஒன்று உயர்வும் மற்றொன்று தாழ்வுமாம் என்ற உட்கருத்துடன் படுப்பாராயினர். அவ்வுட் கருத்துச் சின்னாட்களில் வலியுறுவதாயிற்று. தனிமொழியென்றை அதன் வழிகளோடு வகைப்படுத்தலாமோ? அது முன்னதனை இழிவு படுத்தத்தகாதோ? தமிழனை உண்ணாட்டு மொழிகளுட் படுத்ததேயன்றித் தெலுங்கு , கன்னடம் , மலையாளம் ஆகிய அதன் வழிமொழிகளோடு ஒரு நிகரெனக் கூறலாமோ? ஆரிய மொழிகளுள் தலை

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

நின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்கு வைத்து எண்ணத் துணியாமை போலத் துரானிய மொழிகளுள் தலை நின்ற தென் மொழியை அதன் வழிமொழிகளோடு ஒழுங்கு வைத்து எண்ணத் துணியா திருந்தலே அமைவுடைத்து.

இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வகலாசாலையார் மேற்கூறியாங்குத் தமிழை இழிவுபடுத்தி வகுத்த போதே தமிழ ராயினார் முற்புகுந்து அவ்வாறு வகைப்படுத்தல் சாலா தென மறுத்திருத்தல் வேண்டும். அப்போதெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்து விட்டனர் நம் தமிழ் மொழியாளர். ஆதலில் இப்போழ்தத்து, "சர்வகலாசாலை விசாரணை" (Universities Commission) யில் தமிழ்மொழிக் கல்வியை யோக்கிதைப் பட்டப் பரீட்சைகளினின்றும் ஒதுக்கி விட்டனர்.வடமொழி மட்டில் உயர்தனிச் செம்மொழியாதலின் வைத்துக் கொள்ளப்பட்டது.

ஈதென்னை வம்பு! அவ்வுயர் தனிச்செம்மொழி என்பதன் இலக்கணந்தானென்னை? அதனைச் சிறிது ஆராய்வோம்.

தான் வழங்கும் நாட்டின் கணுள்ள பல மொழிகட்குந் தலைமையும் அவையியற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே உயர்மொழி என்பது இவ்விலக்கணத்தால் ஆராய்ந்த வழி.நம் தமிழ்மொழி தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு,கன்னட ,மலையாள,துளுவங்களுக்கெல்லாம் தலைமையும் அவையியற்றினும் மிக்க மேதகவுடைமையால் தானம் உயர் மொழியேயென்க. தான் வழங்கு நாட்டில் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித் தனித்தியங்க வல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவி மிகும்.அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியின் உதவி களையப்படின் தெலுங்கு, கன்னடம்,மலையாளம் முதலியன இயங்குதலொல்லா ; மற்றும் அவையற்றினுதவி களையப்படினும் தமிழ்மொழி சிறிதுமிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையினியங்க வல்லது.இஃது இந்தியமொழி நூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின், நம் தமிழ்மொழி தனிமொழியேயென்க.

**இனிச் செம்மொழியென்பது யாது?**

"திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூயமொழி புகழ் செம்மொழியாம்" என்பது இலக்கணம்.இம்மொழி நூல் இலக்கணம் நம்முடைய தமிழ்மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொல் முடிவுகளும் பொருள் முடிவுகளும் இன்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதின் உணர வற்றாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண் பெனப்படுவது.இது தமிழ்மொழியின் கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டு மொழிக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும்.அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறமொழி சொற்களன்றித் தன் சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர்தனித் தமிழ்மொழிக்கும் பொருந்துவனவாம்.ஆகவே தமிழ் தூய மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழி என்பது ஒருதலை. இதுபற்றியன்றே தொன்றுதொட்டு நம் தமிழ்மொழி, "செந்தமிழ்" என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று.

ஆகவே, தென்னாட்டின் கண் சிறந் தொ

பரிதமாற் கலைஞர்

ளிரா நின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ் மொழி எவ்வாற்றானாராய்ந்த வழியும் உயர் தனி மொழிச் செம்மொழியேயாம் என்பது திண்ணம். இத்துணை உயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த நம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டு பன்மொழிகளோடு ஒருங்கெண்ணுதல் தவிர்த்துத வடநாட்டுயர் தனிச் செம்மொழி தழிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம்.

(தொடரும்)

# மங்கள சமரவீரவிற்கு ஐ.தே.க.வில் உயர் பதவி!

(கொழும்பு)


ஐக்கிய தேசியக்கட்சியில் அண்மையில் இணைந்து கொண்ட மங்கள சமரவீரவிற்கு



உயர் பதவியொன்று வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் மங்கள சமரவீரவிற்கு கட்சியில் உயர்பதவியொன்று வழங்கப்படவுள்ளதாக அக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொகுதி மக்களுக்காகவும் கட்சிக்காகவும் சேவையாற்றக்கூடிய வகையில் மங்கள சமர வீரவிற்கு உயர் பதவியொன்று வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவை கலைத்து அண்மையில் மங்கள சமர வீர ஐக்கிய தேசியக்கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4)



யாழ். பருத்தித்துறை பஸ்சேவையை சீர் செய்யுமாறு கோரி கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ். பல்கலைக் கழக மாணவர்களை படத்தில் காணலாம்.

# இலங்கை மருத்துவ குழு பாகிஸ்தான் செல்கிறது

பாகிஸ்தானில் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக 15 விசேட மருத்துவர்களைக் கொண்ட குழுவொன்றை எதிர்வரும் மூன்று நாட்களுக்குள் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாகிஸ்தானின் பல பிரதேசங்களில் அண்மையில் பெய்த அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 12 இலட்சம் பேருக்கு மேல் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளவர்களிடையே தொற்று நோய்கள் பரவக் கூடும் என்பதால் அதற்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளவே இலங்கையிலிருந்து விசேட மருத்துவ குழுவொன்றை அனுப்பிவைக்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார். (5-4)

# அரசின் நிர்வாக நடவடிக்கைகள் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சாடுகிறார்

கொழும்பு)

அரசாங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகள் பின்னடைவை எதிர்நோக்கி வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பல துறைகள் இன்று வீழ்ச்சியை எதிர் நோக்கி நகர்ந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாளிகாவத்தை பிரதேசத்தில் அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

புனிதரமழான் நோன்பு காலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் தேவையான அளவு பேரிச்சம்பழங்களை அரசாங்கம் இதுவரையில் ஒழுங்கு செய்யவில்லை. இதனால் இஸ்லாமிய பக்தர்கள் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடலாம் சுகாதாரத் துறையும் கல்வித்துறையும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றது. உயர்தரத் திற்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னர் தனியார்துறை மற்றும் பொதுத் துறை ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துவதாக அரசாங்கம் உறுதிமொழி அளித்த போதிலும் இதுவரையில் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

ஒவ்வொரு துறையாக வீழ்ச்சியடையும் போது அரசாங்கம் தோல்வியைத் தழுவும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (5-2)


நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டைமானாறு

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் 10.08.2010 செவ்வாய் கிழமை ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக நடை பெறுகின்றது. ஆலய தரிசனத்திற்கு என அச்சுவேலி இடைக்காடு தம்பாலை – தொண்டைமானாறு பாதையை அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியினால் திறக்கப்பட்டுள்ளமைக்காக முருகன் அடியார்களோடு நாமும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இப்பாதையை தொடர்ந்து மக்கள் பாவனையில் விடுவதற்கு அமைச்சர் அவர்களின் முயற்சிக்கு ஆற்றங்கரை வேலன் அருள்பாலிக்க நாமும் வேலனை பிரார்த்திக்கின்றோம். மற்றும் ஆலய வீதிகளில் சிறிய கற்கள் இருப்பதை அவதானித்த அமைச்சர் அவர்கள் பல லொறி மணல் மண்களை அன்பளிப்பு செய்து மிகப் பெரிய உதவியையும் செய்திருக்கின்றார். அவர்களுக்கு திருப்பணிச் சபையினருக்கும் பரிபாலன சபையினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



திருப்பணிச் சபையினர்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

தொண்டைமானாறு

2133


# காரை வியாவில் ஐயனார் ஆலயத்தினால் மீள் குடியேறியவர்களுக்கு உதவி

(காரைநகர்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தினால் வன்னியில் இருந்து மீள் குடியமர்ந்தவர்களுக்கு வாழ்வாதார மற்றும் சமூக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ் உதவிகள் நேற்று முன்தினம் நடைபெற்ற வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தோற்சவத்தில் வைத்து வழங்கப்பட்டது.

வன்னியில் இருந்து வந்து மீள் குடியமர்ந்த மக்களில் கால் ஊனமுற்ற இளம் பெண் ஒருவருக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக மின்சாரத்தினால் இயங்கும் தையல் இயந்திரம் ஒன்றும் கணவனை இழந்த இளம் விதவைத்தாய்க்கு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டது.

மேலும் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் வறிய மாணவிகள் இருவருக்கும் தோப்புக்காடு முன்பள்ளி ஆசிரியருக்கும் மூன்று துவிச் சக்கரவண்டிகள் அவசர இருதய சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டிய வறிய சிறுமி ஒருவருக்கு சிகிச்சைக்காக ஒரு தொகைப்பணமும் வழங்கப்பட்டது.

அத்துடன் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இரு பசு மாடுகளும் வழங்கப்பட்டன.

இவ்வாலயத்தின் ஊடாக வறிய மாணவர்களுக்கான மாதாந்த நிதி உதவிகளும் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்திற்கு இலவச நூலக வசதிகளும் இலவச கணனிக்கற்கை நெறிகள் உள்ளிட்ட சமூக மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (5-4-246)

# வங்கி கொள்ளை சந்தேக நபர் கைது

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி தேசிய சேமிப்பு வங் கிக்குச் சொந்தமான 30 இலட்சம் ரூபாவை கொள்ளையிட்ட நபரை 25 நாட்களின் பின் களுவாஞ்சிக்குடி பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

நாவற்காடு பகுதியில் வைத்து கைது செய் யப்பட்ட நபரிடமிருந்து பணம் , தங்கநகை , மோட்டார் சைக்கிள் உட்பட பொருட்கள் மீட்கப் பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.ஆர். மானவடு தெரிவித்தார்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி களுவாஞ் சிக்குடி தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்த மான 30 இலட்சம் ரூபாய் பணத்தை மற்றொரு வங்கியிலிருந்து எடுத்து வரும் போது மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் கொள்ளையிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (5)



சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்த சபையின் தேசிய மத்தியஸ்த தினவிழா சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம் றியாஸ் மற்றும் விருந்தினர்கள் நிற்பதனையும் பதில் தவிசாளர் செ.சபாரத்தினம், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.கே.சனத்குமார ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் சாவகச்சேரி செய்தியாளர்)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையினால் நடத்தப்படும் ***ஈழத்து தமிழ் அறிஞர்களின் இலக்கிய வரலாறு எழுதும் முயற்சிகள்*** என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் வழங்கவுள்ளார். (2-4)

# ஏகநாள் உற்சவ ருது சோபன விழா

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த ஏகநாள் உற்சவ ருதுசோபன விழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 10 மணிக்கு அபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட பூசையும் நடைபெற்று அம்மன் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (4-2)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக்கத்தின் வருடாந்த விளையாட்டு விழா வில் யாழ். மாவட்டத்தில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்று வரும் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொற்றாவத்தை சிவானந்த விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலிகாமம் யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (2-4-24)

## ஸ்ரீ பகவதி அம்மாவின் 56 ஆவது ஜென்மதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினரால் நடத்தப்படும் ஸ்ரீபகவதி அம்மாவின் 56 ஆவது ஜென்மதின நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் மத்தி பிக்காடில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீ அம்மா பகவான் பாத பூசை நிகழ்வும் முக்தி தீட்சை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் ஆசியினை பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக்கொள்கிறனர். (2-4)

# திருமறைக் கலாமன்றத்தினால் "அற்றைத் திங்கள்" கூத்துருவ நாடகம்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் மாலை 6.45 மணிக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் அற்றைத் திங்கள் என்னும் கூத்துருவ நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை ஈழத்தின் பல்வேறு பிரதேச கூத்து மரபுகளான யாழ்ப்பாண தென்மோடி, வட்டுக்கோட்டை வடமோடி, மட்டக்களப்பு வடமோடி, மன்னார் தென்பாங்கு, மன்னார் வடபாங்கு, மலையக காமன் கூத்து, யாழ்ப்பாண சிந்து நடைக்கூத்து, முல்லைத்தீவு கோவலன் கூத்து , யாழ்ப்பாண வசந்தன் கூத்து போன்ற கூத்து மரபுகளை ஒன்றிணைத்து தயாரிக்கப்படும் அரங்க ஆற்றுகையாக அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகம் அமையவுள்ளது.

இதற்கு முன்னர் 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருமறைக் கலாமன்றத்தால் பல்வேறு பிரதேச கூத்து மரபுகளையும் இணைத்து தயாரிக்கப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்ற ***கொல் ஈனுங் கொற்றம்*** என்றும் கூத்துருவ நாடகத்திற்குப் பின்னர் இவ்வாறான பல பிரதேசக் கூத்து மரபுகளையும் ஒன்றிணைத்து தயாரிக்கப்படும் கூத்துருவ நாடகம் ***அற்றைத் திங்கள்*** என்பது குறிப்பிடத்தக்கது.

அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகத்திற்கான ஆசனப் பதிவினை பார்வையாளர்கள் மன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கு தமிழ்,ஆங்கில பயிற்சி முகாம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்கும் இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில எழுத்து , வாசிப்பு பயிற்சி முகாம் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு அவர் அறிவித்துள்ளதாவது ,

இப் பயிற்சி முகாமிற்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 7, 8 ஆம் தரங்களில் கல்வி கற்கும் 12 மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் அனுப்பி வைக்க வேண்டும்.

இதில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை தமிழ் எழுத்துப் பயிற்சி முகாமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தமிழ் வாசிப்புப் பயிற்சி முகாமும் நடைபெறும்.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆங்கில எழுத்துப் பயிற்சி முகாமும் , 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆங்கில வாசிப்புப் பயிற்சி முகாமும் இடம்பெறும்.

இப்பயிற்சி முகாம் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையும் நடைபெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (2-5-19)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(பூநகரி)

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பூநகரிப் பிரதேசமெங்கும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக கடந்த 8 ஆம் திகதி பூநகரி பிரதேசத்தில் உள்ள மட்டுவில்நாடு மேற்கு கிராமசேவகர் பிரிவில் வாடியடி நகர்ப் பகுதியில் இந்நடவடிக்கை இடம்பெற்றது.

இச்சிரமதானப் பணியில் கிராம சேவையாளர், பிரதேச சபைச் செயலாளர், உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலைய அலுவலர்கள் ,பொதுச் சுகாதார பரிசோதகர், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (2)




# வருடாந்த மஹோற்சவம்

மண்டைதீவு -திருவெண்காடு திருவருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை10 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த் தோற்சவமும் நடைபெறவுள்ளது. (2)

(கொழும்புத்துறை)

கொக்குவில் கிழக்கு பொற்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்று செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (2-51)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தை ஒரு மொழியில் கற் பிக்கும் ஆசிரியர்களுக்கான இரு மொழிப் பயிற்சி செயலமர்வு இன்றும் நாளை வியாழக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறும்.

எனவே இச்செயலமர்வில் பெயர் குறிப்பிட்ட விஞ்ஞான ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (2-19)

(கொழும்புத்துறை)

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கேமாஸ் நிறுவனத்தின் பியவரசிறுவர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் செயலமர்வு இன்றும் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களில் உள்ள பியவர சிறுவர் முன்பள்ளி நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் யாழ் மாநகரசபை பியவர சிறுவர் முன்பள்ளி ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-51

வடமராட்சிக் கல்வி வலய ஆசிரிய நிலையத்தில் ஒரு மொழியில் கற்பிக்கும் கணித பாட ஆசிரியர்களுக்கு இருமொழிக் கல்விச் செயலமர்வு எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் பங்குபற்றவுள்ள கணித பாட ஆசிரியர்கள் தங்கள் பெயர்களை வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (2)

# மரதன் ஓட்டப்போட்டி

(கொழும்புத்துறை)


கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியிலான மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடை பெறவுள்ளன.

இதில் இன்று காலை 6 மணிக்கு மரதன் ஓட்டமும் அதனைத் தொடர்ந்து 8 மணிக்கு பெண்களுக்கான சைக்கிளோட்டமும் நடைபெறவுள்ளன.

மறுநாள் காலை 6 மணிக்கு ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் , அதனைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு அங்கத்தவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

மேலும் சிறப்பு நிகழ்வாக காலை 10 மணிக்கு கைதடி சனசமூக நிலைய அங்கத்தவர்களினால் இரத்ததான நிகழ்வும் ,மாலை 7 மணிக்கு பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (2-51)







வலிகாமம் வடக்கு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தை அருள்நேசன் அடிகளார் திருப்பலியின் போது பிரசங்கம் நிகழ்த்துவதையும் கலந்துகொண்ட பங்குத்தந்தை ஞானேந்திரன் ,அருட்தந்தை அன்ரனிதாஸ் அருட்தந்தை ஜோர்ஜ் ஜெயசீலன் அருட்தந்தை சதீஸ் ஆகியோரையும் காணிக்கை பவனியின் போது காணிக்கை செலுத்துவதையும் அன்னம்மாள் வீதி உலா பவனி வருவதற்காக ஆலயத்தில் இருந்து ஆயத்தமாவதையும் படங்களில் காணலாம்.

# நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்

## அமைச்சர் டியூ.குணசேகர ஆலோசனை



(கொழும்பு)

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமானால் நாடாளுமன்றம் நிறை வேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றிடம் அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்க வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதியின் திறமை மற்றும் அரசியல் தலைமைத்துவம் என்பனவே பிரதமர் பத வியை ஏற்படுத்தினாலும் அந்தப் பதவியில் இருப்பவர் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுபவராக இருக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியா, பிரதமரா என்பது நாட்டுக்கு முக்கியமல்ல.அதிகாரமே முக் கியமானது.எவ்வாறான பிரதமர் பதவி ஏற்படுத்தப்பட்டாலும் அந்தப் ப்தவியில் இருப்பவர் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுபவராக இருக்க வேண்டும்.

நாடாளுமன்றம் நாட்டின் அதியுயர் பீடம் என்ற போதிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் நாடாளுமன்றம் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமானால் நாடாளுமன்றம்,நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றிடம் அதிகாரங்கள் பகிரப்பட்டு இருக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் அந்த அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் தனியார் துறைக்கு முக்கியத்துவம் வழங்கும் திறந்த பொருளா தார முறைமை பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உழைக்கும் மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இந்த நிலைமை காரணமாகவே ஆரம்பத்தில் இருந்தே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 78 ஆம் ஆண்டு அரசியலமைப்பு எதிர்த்து வருகிறது எனவும் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். (5)

## சமுர்த்தி அதிகாரிகளுடன் இன்று அமைச்சர் பசில் பேச்சு

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கைக்ளினால் ஏற்பட்ட சர்ச்சைக்கு தீர்வு காண்பதற்காக இன்று பேச்சு வார்த்தைக்கு வருமாறு சமுர்த்தி அதிகாரிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்தப்பேச்சுவார்த்தையில் அமைச்சர்கள் பலர் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுவதாகவும் ஆனால் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா சமூகமளிப்பாரா என்பது குறித்து நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாதெனவும் சமுர்த்தி கூட்டுத்தொழிற்சங்க ஏற்பாட்டாளர் நிசந்த உடவத்த தெரிவித்துள்ளார். கடந்த வாரம் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சி த் திட்டத்திற்கு சமுர்த்தி அதிகாரி ஒருவர் சமூகமளிக்காததையடுத்தே அந்த அதிகாரியை மாமாரத்தில் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா கட்டி வைத்ததையடுத்து எதிர்ப்புத் தெரிவித்து சமுர்த்தி அதிகாரிகள் டெங்கு தடுப்புச் செயற்பாடுகளில் கலந்து கொள்ளாமல் பகிஸ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இது இடம்பெறும் பேச்சுவார்த்தையின் போது தமது நடவடிக்கைகளுக்காக பிரதியமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக மன்னிப்புக்கேட்க வேண்டுமென வலியுறுத்தி அரசாங்கத்திற்கு காலக்கெடு விதிக்கவுள்ளதாக நிசந்த உடவத்த கூறியுள்ளார். பிரதியமைச்சர் மன்னிப்புக் கேட்காவிடின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படுமெனவும் அவர் கூறியுள்ளார். (5)

## நாடு திரும்பிய யுவதி புத்தளத்தில் கடத்தல்

இத்தாலியில் இருந்து 6 நாட்களுக்கு முன்னர் நாடு திரும்பிய யுவதியொருவர் வெள்ளை வானில் சென்றவர்களினால் கடத் திச் செல்லப்பட்டுள்ளதாக புத்தளம் வென்னப் புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ உத்துரு கம்மல என்ற பிரதேசத்தை வசிப்பிடமாககொண்ட 24 வயதான அனுஷிகா மாலினி பீரிஸ் என்ற யுவதியே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவ் யுவதி கடந்த 8 ஆம் திகதி கம்மல பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு அரு கில் இருந்த போது அங்கு வெள்ளை வானில் சென்ற நபர்கள் யுவதியை கடத்திச் சென்றுள்ளனர்.

வென்னப்புவ யுவதியை கடத்திச் சென்ற சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதுடன் யுவதியை கடத்திச் சென்ற வான் கொழும்பைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என கண்டறிந்துள்ளனர். (5)

# ஐ.தே.கவில் இணையுமாறு உத்தியோக பூர்வ அழைப்பில்லை

## அனோமா பொன்சேகா தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் இதுவரையில் விடுக்கப்படவில்லை என அவரது பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள் ளார்.

கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோக பூர்வமாக வேண்டினால் அது குறித்து ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா தீர்மானமொன்றை எடுப்பார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியில் இணைந்து கொள்ளுமாறு சரத் பொன்சேகாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய அண்மையில் பகிரங்க அழைப்பொன்றை விடுத்திருந்தார். எனினும் தனிப்பட்ட ரீதியில் உத்தியோக பூர்வமாக எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தமது கணவரை பார்வையிடுவதற்கு தாம் மட்டுமே செல்வதாகவும் இதனால் இவ்வாறான ஓர் அழைப்பு இதுவரையில் விடுக்கப்படவில்லை என்பதனை உறுதிபடக் கூற முடியும் எனவும் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகா எந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளமாட்டார் என ஜனநாயக தேசியக் கூட்மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோமாளி அமைச்சர்களின் நாடகங்கள் மூலம் பிரச்சினைகளை திசை திருப்புகின்றது அரசு

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களின் எதிர்பார்ப்புக்களையும் வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாமல் தடுமாறும் அரசு பிரச்சினைகளை திசை திருப்புவதற்காக கோமாளி அமைச்சர்களைக் கொண்டு நடாகங்களை அரங்கேற்றி வருகின்றது என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கியதேசியக்கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதில் ஐக்கிய தேசியக்கட்சி பேச்சாளர் கயந்த கருணாதிலக்க மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது, இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித்தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றின் போது அரசு பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியது. அவற்றில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை.

அரச ஊழியருக்கு 2ஆயிரத்து 500 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் அது 2010 ஜனவரிமாதம் முதல் நடை முறைக்குவரும் எனவும் வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால் வாழ்க்கைச் செலவு வானள வாக உயர்ந்துள்ள நிலையிலும் இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவே இல்லை.

இந்தப் பிரச்சினைகளை திசை திருப்புவதற்குத்தான் கோமாளி அமைச்சர்களைக் கொண்டு நாடகங்களை அரசு அரங்கேற்றி வருகின்றது. ஐ.நா. செயலாளருக்கு எதிராக ஒரு அமைச்சர் நகைப்புக்கிடமான உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டார். ஆனால் எதுவுமே நடக்கவில்லை.

சர்வதேச ரீதியாக எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டது தான் மிச்சம். சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு வருகை தரவில்லை என்கிற காரணத்தால் அந்த உத்தியோகத்தரை மரத்தில் கட்டி வைத்து மற்றும் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார் ஒரு அமைச்சர்.

இவ்வாறு பிரச்சினைகளில் இருந்து மக்களை திசை திருப்பும் நாடகங்களையே அரசு அரங்கேற்றி வருகின்றது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (5)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

**யாழ்ப்பாணக் கல்வி வலயம்**

## மாதிரி பரீட்சை–15
## வினாத்தாள் –II

**நேரம்-1 மணி 15 நிமிடம்**

01. பின்வரும் பாடலை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக?

1. முத்து மூத்தாய் மணிகள் - கோதால்
முடியுள்ள மணிகள்
கொத்துக் கொத்தாய் வயலில் - தம்பி
குலுங்குதடா பாராய்

2. நான்கு பக்கம் வரம்பு - அதன்
நடுவே நெல்லின் தாள்கள்
தூங்கி நிற்கும் கதிர்கள் - மயில்
தோகை போல தம்பி

3. தண்ணீர் பாய்ந்து செல்லும் - அதில்
தாவிச் செல்லும் மீன்கள்
கண்குளிரும் காட்சி - நீ
கண்டதுண்டோ தம்பி?

1) பாடல் குறிப்பிட்டுப்படும் காட்சி எதுவாகும்?

2) பாடலில் இடம்பெற்றுள்ள அடுக்குத் தொடர் ஒன்றைக் குறிப்பிடுக?

3) மயிலின் தோகை போல காட்சி தருவது எது?

4) தண்ணீரிலே தாவிச் செல்வது எது?

5) வரம்பின் வடிவம் யாது?

6) தண்ணீர் என்ற சொல்லினை பிரித்தெழுதுக?

7) கண்ணிற்கு குளிர்ச்சியைத் தருவது எது?

8) இப்பாடலில் வந்த உயர்திணை ஒருமை படர்க்கைச் சொல்தருக?

9) வினையெச்சச் சொல் ஒன்றினை எழுதுக?

10) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக?

11) இயல்பொலிச் சொற்கள் 3 தருக?

(11புள்ளி)

02. பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட செய்தி ஒன்று நான்கு துண்டுகளாக கிழிக்கப்பட்டுள்ளது. அதை சரியான ஒழுங்கில் பொருத்தும் முறைக்குரிய ஆங்கில எழுத்தை எழுதுக.

A
ஆண்டில் குறிப்பிட்ட
இக் காலத்தில் பெய்யும்
மழைநீர் பெருக்கெடுத்து
ஒடிக்கடலிலே

B
கலக்க விடாது
இந்நீரோட்டங்களை
வைப்பதற்கு உயர்ந்த
கரைகளோடு

D
இவ்வாறு வீணாக
கடலிலே தடுத்து நீரைச்
சேகரித்து அமைக்கப
பட்டதே அணையாகும்.

C
பருவத்தில்
மட்டுமே அதிகமழை
பெய்யும் திரண்டு
ஓடைகளாகவும்
ஆறுகளாகவும்

(02புள்ளி)

03. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனம் அமைக்குக.
வெளிகளில்/திறந்த /ஆதி/ வசித்து/மனிதர்கள்/காலத்தில்/வந்தார்கள்
(2 புள்ளி)

04. தடித்த எழத்திலுள்ள மரபுத்தொடரிற்கு கருத்தினை எழுதுக.
1. கந்தசாமி வீடு கட்டுவதற்காக அவனது நண்பர்கள் <u>தோள் கொடுத்தனர்.</u>
(2புள்ளி)


05. நிறுத்தற் குறிகளை இடுக.
1. நன்றி தாயே வணக்கம் வருகிறேன்
(1புள்ளி)

06. ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தினை எழுதுக.
1. I am watering the plants –
2. Look at the pictures –
(3புள்ளி)

07. தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலத்தை எழுதுக.
வானவில் –
நீர்வீழ்ச்சி –
(3புள்ளி)

08. சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்க் கருத்தினை எழுதுக.
அம்மா எனவத யன்ன?
(4புள்ளி)
..................................


**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**



பின்வரும் செயற்பாடு எத்தனையாவது சூரிய நமஸ்கார செயற்பாடு ஆகும்.
i. 1ஆவது ii. 3ஆவது iii. 4ஆவது

2. 
பின்வரும் நதிகளில் மாணிக்க கங்கை கலக்குமிடம்
1. களுத்துறை 2. யால 3. கொழும்பு

3. பின்வரும் சேவைகள் வழங்கும் நிறுவனங்களில் இலங்கை மின்சார சபை குறிக்கும் உரு யாது?




4. பின்வரும் எந்த மன்னன் காலத்தில் இலங்கைக்குப் பௌத்த மதம் பரப்பப்பட்டது.
1. தாதுசேனன் 2. பண்டுகாபயன் 3. தேவநம்பியதீசன்

5. பின்வருவனவற்றில் உருகுணைப் பகுதியில் காணப்படும் கலைத்துவப் படைப்பு யாது?
1. சிகிரியா ஓவியங்கள் 2. எம்பக்க தேவாலயம் 3. சிதுல்பவ

6. பின்வரும் பிராணிகளில் இலைக்குருத்துக்களை வெட்டும் பிராணி எது?
1. பச்சைப்பூச்சி 2. மயிர்க்கொட்டி 3. நத்தை

7. பின்வரும் பாடலின் வரிகளை பூரணப்படுத்துக.
ஆலமரத்தின் ....................................
..................................நிழல் தரும்குளிர்ச்சி
.................... கூடு
அதுதான் .................................. வீடு

| | | |
|---|---|---|
| 1. நிழலில் | 2. காய்கள் | 3. அடியில் |
| குளிர்ச்சி | குருவிக்கு | அடடா |
| அதுதான் | ஆகா | ஆலமரத்தின் |
| வீடு | ஆலமரத்தின் | பறவைக்கு |

8. படகமுவ வனம் அமைந்துள்ள இடம்
1. குருநாகல் 2. கண்டி 3. அம்பாந்தோட்டை

9. உலகப் புத்தக தினம் கொண்டாடப்படும் மாதமும் நாளும் சரியானது எது?
1. டிசம்பர் 1 2. மார்ச் 8 3. ஏப்ரல் 23

10. w.w.w என்பதன் விரிவாக்கம் யாது?
1. தொலைநகல் 2. மின்னஞ்சல் 3. வையக விரிவு வலை

11. புளுட்டோ குறைகோளாக் கொள்ளப்பட்ட ஆண்டு எது?
1. 2009 2. 2010 3. 1999

12. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்கள்
1. பாசிப்பயறு 2. சிறகவரை 3. வெள்ளரிக்காய்

13. காற்றின் சக்தியைப் பயன்படுத்தி செய்யப்படும் தொழில்நுட்ப முறைகளில் ஒன்று அல்லாதது.
1. வாகனங்களுக்கு வர்ணம் பூசுதல் (sprayer)
2. அடுப்பில் தீ முட்டுதல்
3. தூசு மாசு அகற்றுதல் (vaccum cleaner)

14. புதுமணத் தம்பதிகளிற்கு கையில் நீர்வார்த்தல் பழக்கம் எந்த இனத்தின் கலாச்சாரப்பண்பாடாகும்.
1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லீம்

15. பின்வரும் பொருட்களைக் கொண்டு ஆக்கப்படும் விளையாட்டு உபகரணம் எதுவாகும்.
(தடி,நூல்,ஒத்தமுனைக்காந்தம்,களிமண்)
1.மின்காந்தம் 2. மின்மணி 3. காந்தத்தினால் சூழலும் கடதாசிப் பந்து

16. பின்வரும் தையல் வகைகளில் அடிப்படைத் தையல் வகைகளில் அடங்காத தையல் எது?
1. சிறுநூலோடி 2. பெருநூலோடி 3. வெட்டுக்குத்துத் தையல்

17. வயலில் அறுவடை செய்த பின்னர் நெற்கதிர்களை குவியலாக அடுக்கி வைக்கப்படும் இடத்தின் பெயர்
1. உப்பட்டி 2. குஞ்சுக்கடகம் 3. பட்டடை

18. பின்வருவனவற்றுள் பூச்சியுண்ணும் தாவரம் எதுவாகும்.
1. நெப்பந்திஸ் 2. மா 3. வாகை 4 பாலை


19. பின்வரும் குறைபாட்டு நோய்களில் விற்றமின் B குறைபாட்டால் ஏற்படுவது
1. ஸ்கேவி 2. என்புருக்கி 3. பெரிபெரி

20. பின்வரும் செயல்முறைகளில் இழுத்தல் விசை ப்யன்படும் செயல்முறை யாது?
1. பாரம் தூக்கியினால் பொருள் ஒன்றைத் தூக்குதல்
2. பந்து ஒன்றுக்குத் துடுப்பால் அடித்தல்
3. புரியாணிச் சாவியினால் சுரைகளைக் கழற்றுதல்


21. பின்வரும் கூற்று எந்த தேசியத் தலைவரின் கூற்றாகும்.
   1. 1887 August 22 ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் பிறந்தேன்.
   2. தரமிக்க 500 மேற்பட்ட நூல்களையும் ஆக்கங்களையும் எழுதியுள்ளேன்.
   3. லண்டன் வைக்கிலி கல்லூரியில் கல்வி பயின்றேன்.
   4. மத்திய கால சிங்களக் கலைகளை உலகறியச் செய்தேன்.

   1. கொங்காலே கொடபண்டா 2. சேர் பொன் இராமநாதன்
   3. கலாநிதி ஆனந்த குமார சுவாமி

22. பின்வரும் மின் சுற்றுக்களில் எந்த மின்சுற்று ஒளிராது என தெரிவு செய்க.




23. பின்வருவனவற்றில் காற்றினால் பரவும் வித்து அல்லாதது எது?



24. இலங்கை தபால் திணைக்களத்தைக் குறிக்கும் ஆங்கில சுருக்கக் குறியீடு எது?
   1. SLDP 2. SLBC 3. SLT


25. கீழே தரப்பட்டுள்ள நெம்புகோலில் எது மூன்றாம் வகை நெம்பு கோலைக் குறிக்கும்.
   1. தூண்டில் 2. ஒற்றைச் சில்லு வண்டி 3. கத்தரிக்கோல்

26.விலங்கின நடையின் தோற்றப்பாடுகளில் பின்வரும் நடைஎதுவாகும்?



1.கரடி நடை
2.நண்டுப்பாய்ச்சல்
3.ஒற்றைச் சில்லு வண்டி நடை

27.பின்வரும் செயற்பாடு எவ் உபகரணம் தயாரித்தல் ஆகும்.



1.நீர்ச்சில்லு
2. நீர்வடிகட்டி
3.கொதிநீராவியால் இயக்கப்படும் படகு


28.மாணவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலையை எமது பாடசாலை என்று கூறுவது எதனை உணர்த்துகிறது.
1.உடைமையை 2.விசுவாசத்தை 3.செருக்கை

29.முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும் பிராணிகளில் ஒன்று
1.பிளாற்றிப்பஸ் 2. வெளவால் 3.திமிங்கிலம்

30.இயற்கைச் சமநிலையை பேணக்கூடிய பிராணி
1.மீன் 2.வண்ணத்துப்பூச்சி 3. கறையான்

1.சதுரமுகி ஒன்றின் நிறை 465 கிராம் எனின் அவ்வாறான 6 சதுரமுகியின் நிறை யாது?
........................ kg ........................... g

2.




சதுரத்தின் சுற்றளவு 24 சென்ரி மீற்றர் எனின் வட்டத்தின் ஆரை யாது?

3. 0.2+0.6-0.3 பெறுமதியை நிழற்றிக்காட்டுக.




4.ஓவியக்கண்காட்சி மு.ப. 7.45 ஆரம்பமாக உள்ளது. இந்நேரத்தை 24 மணித்தியாலய கடிகார நேரத்தில் எழுதுக.

5.



இவ் உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

6.




பேனையின் நீளம் எத்தனை சென்ரி மீற்றர்?

7. ஒரு பெட்டியில் 432 மின் குமிழ்கள் இருந்தன. ஒரு அறைக்கு 4 மின் குமிழ் வீதம் எத்தனை அறைக்கு மின் குமிழ் வழங்கலாம்?

8. குமார் 8 சென்ரிமீற்றர் நீளமான தடி வைத்திருந்தான். அவன் அதை இரு துண்டுகளாக முறித்தான். ஒரு துண்டு மற்றறைய துண்டின் இரு மடங்கிலும் ஒரு சென்ரி மீற்றர் குறைவாகும். சிறிய துண்டின் நீளம் யாது?

9. 8லீற்றர் 024 மில்லிலீற்றர் குளிர்பானத்தை 8 போத்தல்களில் சமமாக ஊற்றினால் ஒரு போத்தலில் உள்ள பானத்தின் அளவு யாது?
........................ l ....................ml


10. சாரதா கடைக்குச் சென்று வாங்கிய பொருட்களின் விலைச்சிட்டை இங்கே காட்டப்பட்டது. அதை அவதானித்து பின்வருவனவற்றுக்கான விடையைத் தருக.

சிட்டை

| பொருட்கள் | ரூ.ச |
|---|---|
| 500 கி.பருப்பு | 54.00 |
| 100 மி.லீ தே.எண் | 12.00 |
| ஒரு பென்சில் | 8.00 |
| 250 கி.சீனி | 42.00 |
| மொத்தம் | 116.00 |

1. 1லீற்றர் தேங்காய் எண்ணையின் விலை யாது?
2. அரை டசின் பென்சிலின் விலை யாது?
3. 100 கிராம் பருப்பின் விலை யாது?
4. 2கிலோ கிராம் சீனியின் விலை யாது?

11.பின்வரும் வரைபை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.




1. ஐந்து நாட்களும் மாலினி கட்டிய சிவப்பு நிற மாலைகள் எத்தனை?
..........................................................................................

2. ஒரு சிவப்பு நிற மாலையின் பெறுமதி 6 ரூபாய் எனின் சிவப்பு நிற மாலையை விற்றால் கிடைக்கும் மொத்தப்பணம் யாது?
..........................................................................................

3. மிகக் குறைந்த வெள்ளை நிற மாலை கட்டப்பட்ட நாள் எது?
..........................................................................................

4.சம எண்ணிக்கையான சிவப்பு நிற மாலைகள் கட்டப்பட்ட நாள் எது?
..........................................................................................

சில மனிதர்கள் மரங்களைத் தறிப்பதற்காக காட்டினுள் நுழைகின் றனர். தறிக்கும் மரங்கள் ஓலமிட்டு அழுகின்றன. பறவைகள் கீச்சிட்டபடி அங்கும் இங்கும் பறந்து திரிகின்றன. காட்டுக்கு அருகே கிராமத்தில் வாழும் சிறுவர்களும் வளர்ந்தோரும் கவலையுடன் நிற்கின்றனர்.
இதனைத்தொடர்ந்து கருத்துள்ள நான்கு சொற்களுக்கு குறையாத 6 வாக்கியங்கள் எழுதுக. (பொருத்தமான எழுவாய் பயனிலைகளுடன்)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

# தேசிய இளைஞர் விளையாட்டு விழா முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில்

## எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகின்றது

தேசிய இளைஞர் விளையாட்டு விழா முதலாம் திகதி முதல் 3 நாட்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக இந்த விழா இங்கு நடைபெறுகின்றது. என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டு விழா எதிர்வரும் மாதம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறு தேசிய இளைஞர் விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளை சர்வதேச இளைஞர் வருடத்தின் 25ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான பிரதான மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

இதில் சுமார் 5ஜயிரம் இளைஞர் யுவதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து 640 இளைஞர் யுவதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

மேலும் சர்வதேச இளைஞர் வருடத்தின் 25ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதம் வரை பல்வேறு வேலைத்திட்டங்களை நடத்துவதற்கு எமது அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கல்விப்பொதுதாராத சாதாரண தரம் மற்றும் உயர்தரப்பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்கள் தாங்கள் வாழ்க்கையில் தோற்றுவிட்டதாக கருதக்கூடாது. அவர்களுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களையும் தொழில் பயிற்சிகளையும் வழங்குவதற்கு எமது அமைச்சு தயாராக இருக்கின்றது என அமைச்சர் குறிப்பிட்டார். (5)

# இலங்கை அகதிகள் கப்பல் குறித்து கனேடிய அரசாங்கம் கரிசனை

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த 200 குடியேற்றவாசிகளுடன் கனடாவை நோக்கி வந்து கொண்டிருக்கும் கப்பல் குறித்து கனேடிய அரசாங்கம் கரிசனை கொண்டிருப்பதாக கனேடிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக்டோவ்ஸ்கூறியுள்ளார்.

ரொரண்டோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ரொரண்டோ பொருளாதாரக் கழக வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

59 மீற்றர் நீளமான இக்கப்பலை பல வாரங்களாக கனேடிய அதிகாரிகள் கண்காணித்து வருகின்றர். ஆட்களை கடத்தப்பயன் படுத்துவதாக கூறப்படும் இக்கப்பலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பான நடவடிக்கை விபரங்கள் குறித்து நான் கருத்துத்தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் யார் இருக்கிறார்கள் ? ஏன் அவர்கள் கனடாவுக்கு வரக்கூடும் என்பது குறித்து நாம் கரிசனை கொண்டுள்ளோம் என அமைச்சர் விக்டோவ்ஸ் தெரிவித்துள்ளார். (5)

# ஓய்வூதியக்கொடுப்பனவுகளை துரிதமாக வழங்க புதியதிட்டம்

## ஓய்வூதியத்திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான புதிய செயற்றிட்டம் ஒன்றினை ஓய்வூதிய திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்குரிய பணிக்கொடை மற்றும் இழப்பீட்டுத்தொகை என்பவற்றுக்கான காசோலைகளை வழங்கும் போது ஏற்படக்கூடிய தாமதத்தை தவிர்க்கும் வகையில் புதிய நடைமுறை பின்பற்றப் படவுள்ளது.

இதன் பிரகாரம் கொடுப்பனவுகளை காசோலை மூலம் அனுப்பி வைப்பதற்கு பதிலாக உரிய தொகையை குறித்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தொகை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் இது பற்றி திணைக்களத் தலைவருக்கும் ஓய்வூதியம் பெறுபவருக்கும் அறிவிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஓய்வூதிப் பணிக்கொடை மரணப்பணிக்கொடை மற்றும் இழப்பீட்டுக்கொடுப்பனவு போன்றவற்றை வழங்கும் போது இந்த புதிய நடைமுறையை பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின் மூலமாக கொடுப்பனவை பெறுபவர்களுக்கு துரிதமாக அவற்றை வழங்குவதற்கு வசதியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நடைமுறையை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு வசதியாக நாட்டின் சகல அரச திணைக்களங்களினதும் வங்கிக் கணக்குகள் தொடர்பான விபரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# மலேசியாவில் சிக்கிய ஈழ அகதிகள் 75 பேரையும் பதிவு செய்தது ஐ.நா!

(கொழும்பு)

சட்விரோதமாக அவுஸ்திரேலியா செல்லும் வழியில் விபத்தில் சிக்கி மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 75 இலங்கையர்களையும் பதிவு செய்யும் நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் நோக்கில் 75 இலங்கையர்கள் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி படகொன்றில் பயணத்தை ஆரம்பித்தனர்.

எனினும் படகு விபத்தில் சிக்கியதையடுத்து மலேசிய கடற்படையினர் அவர்களை மீட்டனர். அத்துடன் அவர்களை மலேசியப் பொலிஸார் கோலாலம்பூர் விமான நிலையத்திற்கு அருகில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அவர்களின் விபரங்களை பதிவு செய்துள்ளது. (5)

# 11.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- கிமு 2492 - ஆர்மீனியா அமைக்கப்பட்டது.
- கிமு 480 - பாரசிகர்கள் கிரேக்கர்களை கடற்சமரில் வென்றனர்.
- கிமு 586 - ஜெருசலேமில் சொலமன் மன்னனால் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் பாபிலோனியர்களினால் அழிக்கப்பட்டது.
- 355 - நாட்டுத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட குளோடியஸ் சில்வானஸ் ரோமப் பேரரசனாகத் தன்னை அறிவித்தான்.
- 1786 - மலேசியாவில் பெனாங்கில் கப்டன் பிரான்சிஸ் லையிற் என்பவனால் பிரித்தானியக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.
- 1804 - இரண்டாம் பிரான்சிஸ் ஆஸ்திரியாவின் முதலாவது மன்னன் ஆனான்.
- 1812 - இலங்கையில் தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டது.
- 1898 - அமெரிக்கப் படைகள் புவெர்ட்டோ ரிக்கோவின் மயாகெஸ் நகரினுள் நுழைந்தன.
- 1920 - லாத்வியாவின் அதிகாரத்தை போல் ஷெவிக் ரஷ்யாவிடம் வழங்கும் உடன்பாடு லாத்வியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் ஏற்பட்டது.
- 1954 -கன்னியாகுமரி மற்றும் செங்கோட்டை மாவட்டங்களை தமிழ் நாட்டுடன் இணைக்கும் போராட்டத்தில் பங்கு பற்றிய 16 தமிழர்கள் காவற்துறையினரால் சுடப்பட்டு மாண்டனர்.
- 1960 - பிரான்சிடம் இருந்து சாட் விடுதலையை அறிவித்தது.
- 1965 - கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் வாட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் 34 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- 1968 - பிரித்தானியாவின் நீராவித் தொடருந்து தனது கடைசி பயணிகள் சேவையை நடத்தியது.
- 1972 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க தாக்குதல் படையினர் தென் வியட்நாமை விட்டுப் புறப்பட்டனர்.
- 1975 - போர்த்துக்கீசத் தீமோரில் உள்நாட்டுக் கலவரம் ஆரம்பித்ததில் அதன் ஆளுநர் "மாரியோ லெமொஸ் பிரெஸ்" தலைநகர் டிலியை விட்டுத் தப்பினார்.
- 1984 - வானொலி ஒன்றிற்காக தனது குரலை சோதிப்பதற்காக அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகன் கூறியது: "எனது சக அமெரிக்கர்களே, ரஷ்யாவை அழிப்பதற்கான சட்டவாக்கத்திற்கு இன்று ஒப்புதல் அளித்திருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிட நேரத்தில் குண்டு வீச்சு ஆரம்பமாகும்"
- 1999 - ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் முழுமையான சூரிய கிரகணம் தென்பட்டது.
- 2003 -ஆப்கானிஸ்தானுக்கு அமைதி காக்கும் படையை நேட்டோ நாடுகள் அனுப்பின.
- 2003 - ஜெமா இஸ்லாமியா இயக்கத் தலைவர் ரிதுவான் இசாமுதீன் (ஹம்பாலி) பாங்கொக் நகரில் கைது செய்யப்பட்டார்.

## பிறப்புகள்

- 1837 - மரீ பிரான்சுவா சாடி கார்னோ, பிரெஞ்சு அரசியல்வாதி (இ. 1894)
- 1897 - எனிட் பிளைட்டன், எழுத்தாளர் (இ. 1968)
- 1937 - ஜான் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் (இ. 1987)
- 1943 - பெர்வேஸ் முஷாரஃப் பாகிஸ்தான் அதிபர்
- 1959 - தர்மரத்தினம் சிவராம், இலங்கையின் பிரபலஊடகவியலாளர்(இ. 2005)


## இறப்புகள்

- 1747 - விஜய ராஜசிங்கன் - கண்டி நாயக்க மன்னன்
- 1890 - ஜோன் ஹென்றி நியூமன், ஆங்கிலக் கர்தினால், ஆக்ஸ்போர்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர் (பி. 1801)
- 1956 - ஜக்சன் பொல்லொக், அமெரிக்க ஓவியர் (பி. 1912)

## சிறப்பு நாள்

- சாட் - விடுதலை நாள் (1960)
- பிரேசில் - மாணவர் நாள்

2006 -யாழ்.குடாநாட்டையும் இலங்கையின் தெனபகுதியையும் இணைக்கும்ஏ-9 நெடுஞ்சாலை கால ரையறையின்றி மூடப்பட்டு யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டிற்குள் முடக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் 24 மணிநேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.



## வீட்டில் விடை எழுதி வந்த மாணவன்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரீட்சையில் வினாத் தாள் ஒன்றை மாணவன் ஒருவன் வீட்டுக்கு எடுத்துச்சென்று சுமார் அரைமணித்தி யாலத் தின் பின் அதை விடைகளுடன் பரீட்சை நிலை யத்திற்கு கொண்டு வந்த சம்பவம் பொலன் றுவையில் இடம்பெற்றுள்ளது.

எனினும் குறித்த விடைத்தாள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (5)

## பருத்தித்துறை– யாழ்ப்பாணம் பஸ்சேவையை சீர்செய்யுமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சேவை யின் பருத்தித்துறை டிப்போவின் பருத்தித் துறை– யாழ்ப்பாணம் பாதையினூடான 769 பஸ் சேவையினை சீரான நேர ஒழுங்கில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் கோண் டாவில் டிப்போவிற்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவிக்கையில் ,பருத்தித் துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான சேவையில் இரண்டு பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதில் முதலாவது சேவை காலை 6.45 மணிக்கும் இரண்டாவது சேவை காலை 7.10 மணிக்கும் இடம்பெறுகின்றன.

இரண்டாவது சேவையில் ஈடுபடும் 769 இலக்க பஸ் சேவை யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்காக திருநெல்வேலி வரை ஏற்றுகின்றது.

எனினும் இச்சேவையில் பல்கலைக்கழக , பாடசாலை,தொழில்நுட்ப கல்லூரி மாண வர்கள் ,அரச ,அரச சார்பற்ற நிறுவன ஊழி யர்கள் மற்றும் பொதுமக்களும் பயணிப் பதால் காலை 9.15 மணிக்கு தினமும் பஸ் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றது.

இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் உரிய நேரத்திற்கு விரிவுரைகளுக்குச் செல்ல முடியாதுள்ளனர்.

அத்துடன் அரச ,அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களும் உரிய நேரத்திற்கு கடமைக் குச் செல்ல முடியாதுள்ளதால் மேலதிகாரிக ளின் விசனத்திற்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இதைவிட 769 இலக்க பாதையினூடான பஸ் சேவை தினமும் இடம்பெறாமல் வாரத்தில் ஓர் தடவையே சேவையில் ஈடுபடு கின்றது.

அத்துடன் இச்சேவையில் வடமராட்சி குஞ்சர் கடைக்கு பின்னர் பயணிகள் ஏற்று வதில்லை.

இது தொடர்பாக கோண்டாவில் டிப்போவி லும் பருத்தித்துறை டிப்போவிலும் பல முறை முறைப்பாடுகள் செய்தும் எதுவித நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தற்போது ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுவதனால் இதனை சீர் செய்து தருமாறு கோரி நேற்றுக் காலை பருத்தித்துறையில் இருந்து திருநெல் வேலி வரை சேவையில் ஈடுபட்ட பஸ்ஸினை கோண்டாவில் டிப்போ வரை கூட்டிச் சென்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் தமது பிரச்சினைகளை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதான முகாமையாளருக்கு எடுத்துக்கூற முயன்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் களை கோண்டாவில் டிப்போ பாதுகாப்புச் சேவை ஊழியர்கள் தடுத்தனர்.

அத்துடன் கோப்பாய் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் சம்பவ இடத்திற்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தடுத்தனர்.

(2-5-7-37)

## இந்திய புலமைப்பரிசில் திட்டத்திற்கு கல்வி அமைச்சினால் மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் இலங்கை மாணவர்க ளுக்கு வழங்கப்படும் மகாத்மாகாந்தி புலமைப் பரிசில் பரீட்சைத் திட்டத்திற்கு தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை களை கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளது.

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக உயர்தரத்தில் கல்வியை தொடர்வதில் சிரமங் களை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு உத வும் வகையில் கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த புலமைப்பரிசில் நிதி வழங் கப்பட்டு வருகின்றது.

வருடாந்தம் தெரிவு செய்யப்படும் சுமார் 100 மாணவர்களுக்கு தலா 36 ஆயிரம் ரூபா நிதி உதவுத்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதா ரண தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முன் னிலை வகிக்கும் மாணவர்களுக்கு உரிய விண்ணப்பப் படிவங்கள் கல்வியமைச்சி னால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உடனடி யாக கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்குமா றும் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் சுதந்திர தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் வேளையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழ ங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. (5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### பொன்னாங்காணி

Botanical Name-Alteranthera sessils
Family - Amaranthaceae
Engl- Sessils plant
Sinh- Mucunuwenna

பல கிளைக் கொடிகளுடன் கணுக்களில் வேர் தோன்றி நான்கு பக்கங்களிலும் அடர்த் தியாக படரும் கரும் பச்சையும், நல்ல வழ வழப்புமுள்ள இலைகள் கத்தி போல் நீண்டிருக்கும். இலை சுமார் 3,5 செ.மீ நீளமும்,சுமார் ஒரு செ.மீ அகலமும் உள் ளதாக இருக்கும். சிறிய மிளகளவுள்ள பூங் கொத்தில் வெண்மையான பூக்கள் வாடா மல்லிகைப் பூவைப்போல் அதிகம் அடுக்க டுக்காய் அமைந்துள்ளன. இப்பூங்கொத்து நாளடைவில் வளர்ந்து அதிக பூக்களைப் பெற்று, சுமார் அரை அங்குல நீளம் வரைக் கும் வளரும். இதன் விதைகள் மிகச் சிறி யவை. கோடையில் இலை காய்ந்து சருகாகும். நல்ல மழைக்குப் பின்னர் அடி வேரினின் றும் துளிர்கட்டும்.

**பரம்பலும் , இனவிருத்தியும்:**

யாழ். மாவட்டத்தில் தானாக முளைத்து வளருகின்றது. ஆழமற்ற நீர் தங்கியுள்ள பள்ளங்களிலும் , நீர் நைப்புள்ள இடங்களி லும் காணலாம்.

எல்லா வகை மண்களிலும் நன்கு வள ரும். இலைகளுடன் கூடிய தண்டை அறுத் தெடுத்து வீட்டுத் தோட்டங்களிலும், வீட்டுக் காய்கறித் தோட்டப் பாத்திகளிலும் ,வரப்பு களிலும் நடலாம். நட்ட இரண்டு மாதத்திலி ருந்து 10 நாட்களுக்கு ஒருமுறை கீரையை அறுவடைசெய்து பயன்படுத்தலாம். ஒரே பாத்தியில் ஓரிரு ஆண்டுகள் இருக்கலாம்.

**மருத்துவப் பயன்கள்:**

✦ பொன்னாங்காணி என்பது பொன் + ஆம் + காண்+ நீ இதை நீ உண்டால் உன் உடல் பொன்னாக விளங்கும் என்பதாகும். கொழுந்து இலைகள் உண்ணுவதற்கு சுவையாக இருக்கும். இக்கீரையை துவரம் பருப்பு அல்லது பாசிப்பருப்புடன் நெய் , மஞ்சள் பொடி , பூண்டு , இஞ்சி , பெருங் காயம் ,வெங்காயம் சேர்த்து வேக வைத்துக் கொண்டு கடாயில் எண்ணெய் விட்டு அதில் கொத்தமல்லி, மிளகாய் வற்றல், கடுகு , உளுத்தம் பருப்பு சேர்த்து தாளித்து சிறிது உப்பும் போட்டு கொதிக்க விட்டு சாம்பாறாக தயாரிக்கலாம்.

100 கிராம் பொன்னாங்காணி கீரையி லுள்ள சத்துக்கள்:

| | |
|---|---|
| ஈரலிப்பு | 77.4 கிராம் |
| சக்தி | 73 கி.கலோரி |
| புரதம் | 5 கிராம் |
| கொழுப்பு | 07 கிராம் |
| காபோவைதரேற்று | 11.6 கிராம் |
| கல்சியம் | 510 மி.கிராம் |
| பொஸ்பரஸ் | 60 மி.கிராம் |
| இரும்பு | 16.7 மி.கிராம் |
| βகரோட்டின் | 1926 மைக் .கிராம் |
| ரைபோபிளேவின் | 140 மைக்.கிராம் |
| நியாசின் | 1.2 மி. கிராம் |
| விற்றமின் C | 17.மி.கிராம் |




இதன் மூலம் இக்கீரையில் உள்ள சத் துக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

✦ இந்த இலையை மட்டும் ஆய்ந்து கொண்டு பசுவின் வெண்ணெய் சேர்த்து உப் பில்லாமல் வேக வைத்து அதில் தேங்காய் துருவலை சேர்த்து தினம் உணவுடன் உண்டு வரலாம். இப்படி இரண்டு மாதம் வரையிலு மாவது சாப்பிட்டு வந்தால் கண்நோய் அனைத்தும் அதாவது பார்வை மங்கல் , நீர் வடிதல் , கண்ணெரிச்சல் போன்றவை குண மாகும். தொடர்ந்து உண்டு வந்தால் ‘‘பகலில் கூட நட்சத்திரங்களை காணலாம்’’ என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

✦ இலையை மைபோல் அரைத்து வெள் ளைப் பருத்தித் துணியில் வில்லையாகத் தட்டி குளிர வைத்து இரவில் கண் இமைகள் மீது வைத்து கட்டி வர கண் நோய்கள் தீரும். உஷ்ணம் குறையும்.

✦ நல்லெண்ணெய் 100 மில்லி லீற்றர் , பொன்னாங்காணி சாறு 100 மில்லி லீற்றர் , 30 கிராம் அதி மதுரம் சேர்த்து காய்ச்சி பதம் வந்ததும் இறக்கி வடிகட்டி வைத்துக் கொண்டு தினசரி தலைக்குத் தடவி வர கண் எரிச்சல் , நீர் வடிதல் , தலைச்சூடு நீங்கி கண் குளிர்ச்சி பெற்று நல்ல பார்வை உண்டாகும். தேகம் பொலிவும் , வலுவும் பெறும்.

✦ இக்கீரையோடு பூண்டையும் சமபாகம் சேர்த்து நெய்யில் வதக்கி சாதத்தோடு சேர்த்து சாப் பிட்டு வர மூலநோய் குண மாகும். மேலும் வாய் நாற் றம் , ஈரல் நோய் , வெள் ளை சாய்தல் , வயிறு எரிச் சல் போன்றவை குணமா கின்றன.

✦பொன்னாங்காணிச் சாற்றோடு பசு நெய்யும் தாய்ப்பாலும் சேர்த்து (சமபாகம்)காய்ச்சி காலையில் தேய்த்து மாலையில் குளிர்ந்த நீரில் குளித்து வர உஷ்ண சம்பந்தமான அனைத்து வியாதி களும் குணமாகும்.

✦ சுத்தமான பச்சை இலைகளை நன் றாக அரைத்து காலையில் வெறும் வயிற் றில் ஒரு பாக்களவு (5 கிராம்) 40 நாட்கள் சாப்பிட்டு வர கண்குறைபாடுகள் நீங்கும்.

✦ இதன் இலைச்சாறு 2800 மில்லி , கரிசாலைச் சாறு 1400 மில்லி, நெல்லிக் காய்ச் சாறு 1400 மில்லி ,நல்லெண்ணெய் 2800 மில்லி , பசும் பால் 2800 மில்லி , பாலிட்டரைத்த அதிமதுரம் 70 கிராம் ஆகிய வற்றை கலந்து காய்ச்சி மெழுகுப் பதத்தில் வடிகட்டி தலையில் தேய்த்து குளித்து வர கண்நோய்கள் , பித்த நோய்கள் நீங்கும். கண் பார்வை தெளிவு பெறும். உடலிலுள்ள சொறி ,சிரங்கு நீங்கும்.

**பொன்னாங்காணி கீரை சூப்**

✦ பொன்னாங்காணி கீரை ஒரு கப் , தேங்காய் துருவல் ஒரு மூடி , பெருஞ்சீரகம் ஒரு தேக்கரண்டி , கராம்பு மொட்டு 2 , ஏலக்காய் 5 , துவரம் பருப்பு 50 கிராம், நீர் 21/2 கப் , சின்ன வெங்காயம் பொடியாக அரிந்தது ஒரு கைப்பிடி , தக்காளி 3, மல்லி 4 தேக்கரண்டி, எலுமிச்சம்பழம் 1, மிளகு 1/2 தேக்கரண்டி , பசு நெய் 4 தேக்கரண்டி , பூண்டு 4 பல் , இஞ்சி 1 துண்டு , கறிவேப் பிலை.

**செய்முறை**

தேங்காய் துருவலை நன்கு அரைத்து பெருஞ்சீரகம் கடைசியாக வைத்து அரைத்து நீரில் கரைத்து ஊற்றவும். வெங்காயம் அரி ந்தது பாதியளவு நீரில் போடவும். தக்காளி 2 ஐ அரிந்து போடவும், உப்பைச் சேர்க்கவும், துவரம் பருப்பை வேகவைத்து கடைந்து சூப்பில் போடவும், மல்லியை மசிய அரைத்து சேர்த்து வாணலியில் நெய் விட்டு மேற்படி சூப்புப் பொடியை சேர்த்து பூண்டையும் இஞ்சியையும் (தோல் சீவி) சேர்த்து அரைத்து அதில் சேர்த்து தக்காளி ஒன்று , கறிவேப்பிலைஇவற்றைப் போட்டு வதக்கி சூப்பை தாளித்து கடைசியாக எலுமிச்சப் பழச்சாறு ஊற்றி மிளகுத் தூள் போட்டு கலக்கி காலை , மாலை , மதியம் பருகிவர வேண்டும்.

இதனால் வயிற்றுப் புண், வாய்ப்புண் நீங்கி நல்ல ஜீரண சக்தி உண்டாகி கண் களில் புதிய ஒளி கிடைக்கும். உடலிற்கு தேவையான இரும்புச் சத்து , உயிர்ச்சத்து A என்பனவும் போதியளவு கிடைக்கும். பெண்களின் தலை முடி கறுத்து , நீண்டு அடர்ந்து வளரும். இது ஓர் காயகற்ப மூலிகை ஆகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# CIMA கல்வித் தகைமை மேலும் வலுப்படுத்தப்படுகின்றது

# இறுதி மட்ட பூர்த்தியாளர்களுக்கு பிரித்தானியாவில் மேல் படிப்பு

குளோஸ்டஸயர் பல்கலைக்கழகமானது 175 வருட சிறந்த வரலாற்றினையும் நான்கு பீடங்களை செல்டன்னம் மற்றும் குளொஸ்டரில் கொண்டு பிரித்தானியாவில் சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இப்பல்கலைக்கழகமானது டொப் CIMA இறுதி மட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோர் மற்றும்CIMA அங்கத்தவர்களுக்கும் விசேட சலுகையாக நான்கு மாதங்களில் பிரித்தானிய மேல் பட்டப்படிப்பினைப் பூரணப்படுத்தும் வாய்ப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.

குளோஸ்டஸயர் பல்கலைக்கழக வர்த்தக பீட உதவி அதிபர் சூ டேவிஸ் தமது கருத்தில் “இத்திட்டமானது CIMA மாணவர்கள் மேல் பட்டப்படிப்பினை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வழிமுறையினை வகுத்துள்ளது. இப் பாடத்திட்டமானது மாணவர்கள் தமது அறிவினை மேலும் அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்பினையும் இத்துறையில் காணப்படும் புதிய அபிவிருத்திகள் மற்றும் தொழிநுட்ப மாற்றங்கள் போன்றவற்றின் அறிவினைப் பெற்றுக் கொள்ளவும் பெரும் உதவியினை வழங்குகின்றது. இதனூடு CIMA மாணவர்கள் துறை சார் ரீதியாக தனித்துவம் பெற்று விளங்கவும் இலகுவான வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளவும் உதவுகின்றது. மேலும் நிறுவனங்கள் தமது ஊழியர்களின் திறனை மேலும் சிறந்த முறையில் இனங்காண் பதற்கும் இத்திட்டமானது வழியமைக்கின்றது'' எனத் தெரிவித்தார்.

CIMA தெற்காசிய மற்றும்மத்திய கிழக்கு நாடுகள் அமைப்பின் பிரதம அதிகாரி பிறட்லி எமர்சன் இப்புதிய திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் CIMA கல்வித் தகைமையானது பட்டப்படிப்புக்கு ஈடாகக் கருதப்படுகின்றது. குளோஸ்டஸயர் பல்கலைக்கழகத்தினால் மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு சலுகையானது CIMA வின் சர்வதேச




அங்கீகாரத்தினை மேலும் உறுதிப்படுத்துகின்றது. பல்வேறு அபிவிருத்தியை எதிர் நோக்கும் இக்கணனி உலகில் சிறந்த நிபுணத்துவ பட்டத்துடன் மேல் படிப்பு பட்டமும் இணைந்து காணப்படுதல் சில வருடங்களில் முகாமைத்துவ தொழிலுக்கு இன்றியமையாததாகக் காணப்படும் என்பதில் எவ் வித ஐயமுமில்லை. எனவே எமது மாணவர்களும் அங்கத்தவர்களும் நிச்சயமாக சர்வதேச மற்றும் உள்நாட்டு துறை சார் தேர்வில் முதல் இடத்தினை பெறும் வாய்ப்பினை இச் சலுகை மேலும் வலுப்படுத்துகின்றது என கூறினார்.

குளோஸ்டஸயர் பல்கலைக்கழகமானது இதனோடு (CIMA)அங்கத்தவர்களினை பிரித் தானிய மேல்ப்பட்டப்படிப்பினைப் பூரணப் படுத்தும் வாய்ப்பினை வழங்கியுள்ளது. தமது ஆய்வு அறிக்கையினை சமர்ப்பித்து பின்னர் இச்சலுகைக்கு தேர்வாகி மாணவர்கள் கணக்கியல் மற்றும் நிதியியல் துறையில் மேல்பட்டபப்டிப்பினைப் பெறுவதே இதன் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தினோடு (CIMA) அமைப்பானது சர்வதேச ரீதியில் கணக்கியல் முகாமைத்துவத்தினை வழங்கும் ஏனைய போட்டியாளர்கள் மத்தியில் முன்னணியில் திகழும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறாக சிறப்பு சலுகைகளினை மாணவர்களுக்கு அறிமுப்படுத்துவதன் மூலம் (CIMA)கல்வி தகைமையானது இதனது 91 வருட செயற் பாட்டில் இலங்கையில் 3000 அங்கத்தவர்களையும் 12 ஆயிரம் மாணவர்களையும் உட் கொண்டு மொத்தமாக 172 ஆயிரம் அங் கத்துவர்கள் மற்றும் மாணவர்களையும் கொண்டு 165 நாடுகளில் சர்வதேச ரீதியில் செயற்படு கின்றது.

சர்வதேச அபிவிருத்தி அதிகாரி டாக்டர் ஜிம் ஸிம்ஸன் தமது கருத்தில் “பிரித்தானிய மேல் பட்டப்படிப்பினை பூரணப்படுத்தும் வாய்ப்பினை CIMA அங்கத்தவர்கள் மற்றும் மாண

விளம்பர விபரணங்கள்

வர்கள் £3300 செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும். மாணவர்கள் முழு வருட பாடத் திட்டத்தினை எமது பல்கலைக்கழகத்தில் பயில்வார்கள். சர்வதேச மாணவர்கள் UK Tier 4 திட்டத்தினூடு தமது ஏனைய விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் அவசியம்”

குளோஸ்டஸயர் பல்கலைக்கழகமானது தற்போது நிறைவு பெற்ற தர ஆய்வில் சிறந்த இடத்தினைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் தனியார் அமைப்பினால் சிறந்த பிரித்தானிய பல் கலைக்கழகங்களுள் ஒன்றாகவும் இதுதேர்வு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள 2503880 அல் லது குளோஸ்டஸயர் பல்கலைக்கழக பிரதிநிதியினை VIEC at 27 Havelock Road, Colombo 5 on 0112585583 நாடவும்.

# தானியங்கி கொங்கிறிட் கலவை இயந்திரத்தை மிருசுவிலில் நிறுவியது டோக்கியோ நிறுவனம்

டோக்கியோ சீமெந்து ஸ்தாபனத்தின் 8ஆவது தானியங்கி கொங்கிறிட் கலவை நிலையம் மிருசுவிலில் 3ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்தை சம்பிரதாய முறைப்படி



டோக்கியோ சீமெந்து ஸ்தாபனத்தின் இணை முகாமைத்துவ பணிப்பாளர் ஜனகிஹார திறந்து வைத்த பின் ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது,

வடபகுதியிலும் மற்றும் சுற்றாடலில் இருக்கும் மக்களின் அபிவிருத்தி நிர்மாண வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. கட்டட வேலைகளுக்கும் வீதி அபிவிருத்தி பணிகளுக்கும், வீதிகளில் உள்ள பாலங்கள் அமைப்பதற்கும் முக்கியமாகத் தேவைப்படும் சீமெந்து கொங்கிறிட் கலவை மிகவும் முக்கியமாக அமைகிறது.

இக் கொங்கிறிட்டினை தரமிக்கதாகவும் துரிதமாகவும் பெறுவதற்கு நாம் இன்று மிருசுவில் கொங்கிறிட் கலவை தயாரிக்கும் தானியங்கி இயந்திர நிலையத்தை ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வியந்திரங்களை இலங்கையில் பேலியகொட ,கண்டி ,அனுராதபுரம், திருகோணமலை, அளுத்கம, மூதூர் முதலிய இடங்களில் அமைத்துள்ளோம்.

எங்கள் தானியங்கி கொங்கிறிட் கலவைகள் மூலம் தயாரிக்கப்பட்ட கொங்கிறிட் கலவை ,மிகப் பெரிய திட்டங்களுக்கு பாவிக்கப்பட்டு வருகிறது. அஷ்ரப் துறைமுகம் ,பிறிமா துறைமுகம் ,கட்டுநாயக்க விமான நிலையம் ,தென்பகுதி பெருந்தெரு போன்றவற்றுக்கு உடனடி கொங்கிறிட் கலவைகள் எமது ஸ்தாபனத்தால் வழங்கியுள்ளோம்.

கொங்கிறிட் பாவனையின் போது ஏற்படும் தொழிலாளர் பற்றாக்குறை, வீண் விரயம், கனிப்பொருட்கள் பெறுவதில் ஏற்படும்காலதாமதம் முதலியவற்றால் ஏற்படும்பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு தானியங்கி இயந்திரக் கலவை இன்றியமை யாததாகவுள்ளது.

இவ் தானியங்கி இயந்திர ஆலை திறம்பட செயற்பட்டால் வடபகுதி மக்களுக்கு குறிப்பாக மிருசுவில் வாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்கு அரிய சந்தர்ப்பமாக அமையும் என அவர் குறிப்பிட்டார்.

# வீட்டுப்பாவனைக்கான நவீன மின் உபகரணங்களை யாழில் அறிமுகப்படுத்தும் மிடியா எலக்ரோ மார்ட்

யாழ் மாவட்டத்தில் வீட்டுப் பாவனை மின் உபகரணங்கள் மற்றும் மின் சாதனங் களின் நவீன வரவை அறிமுகப்படுத்தி சிறந்த சேவையை வழங்குகின்றனர் மிடியா எலக் ரோ மார்ட் (Midea Electro Mart) நிறுவனத்தினர்.

நிறுவனத்தின் சேவைகள் தொடர்பில் அதன் உரிமையாளர் எம். மதியழகன் தெரிவிக்கையில் ,

மிடியா எலக்ரோ மார்ட் நிறுவனம் வீட்டுப் பாவனை மின்சாதனங்கள், மின் உபகரணங்கள் மற்றும் கணனி வகைகளை யாழ் மாவட்டத்திற்கு நவீன முறையில் தருவித்து வழங்குவதுடன் விற்பனைக்குப் பிந்திய சேவைகளையும் வழங்குகின்றது.

மையில் சந்தைக்கு வந்த தொலைக் காட்சிப் பெட்டிகள் (LCDஉட்பட) CD/DVD Player, ரேடியோ, சலவைஇயந்திரம், (Washing mechine) Woofer, Ovan, குளிரூட்டி (Air Condition) மின்சமையல் உபகரணங்கள் Sony Projector உட்பட அனைத்து சாதனங்களும் உத்தரவாதத்துடன் வழங்குவதுடன் விற்பனைக்கு பிந்திய சேவையும் செய்து தரப்படும். அத்துடன் எமது நிறுவனத்தில் கொள் வனவு செய்யப்பட்ட மின் உபகரணங்கள், சாதனங்கள் பழுதடையும் பட்சத்தில் அதற்குரிய உதிரிப் பாகங்கள் குறித்த தயாரிப்பு நிறுவனத்திலிருந்து தருவித்துத் தரப்படும்.

தற்போது எமது நிறுவனம் உலகத் தரம்




எமது நிறுவனம் Sony, Samsung, Panasonic, Pionear, National, Nipp on, Telesonic ஆகிய உலகத் தரம் வாய்ந்த நிறுவனங்களின் மின் உபகரணங்களைத் தருவித்து வழங்குகின்றது.

குறிப்பாகப் புதிய தொழிநுட்பத்துடன் அண்

வாய்ந்த கணனி வகைகளை விற்பனை செய்கின்றது. இதற்காக விசேட கணனிக் காட்சி அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் மாணவர்களுக்கு விசேட சலுகை விலையில் கணனி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
– சம்பந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு மகேஸ்வரி நிதியத்தினால் மண் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந் நிதி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு ஆல யத் திருப்பணிகளை மேற்கொள்வதற்கும். ஆலய சுற்றுச் சூழலில் தூய்மையைப் பேணும் பொருட்டும் மகேஸ்வரி நிதி யத்தால் 75 உழவு இயந்திர மண் லோடுகள் பார ஊர்திகள் மூலம் நேற்றுமுன்தினம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலயத்திருப்பணி வேலை களுக்காகவும் அடியார்கள் அங்கப்பிரஷ்டை செய்யும் வீதி களை செப்பனிடும் பொருட்டும் சுவாமி வீதிவலம் வரும் பாதைகளின் திருத்த வேலைகளுக்காகவும் ஆலய பரிபாலன சபையினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று மகேஸ்வரி நிதி யத்தால் மணல் வழங்கப்பட்டுள்ளதாக நிதியத்தின் செயற் திட்ட இணைப்பாளர் தம்பித்துரை றஜீவ் தெரிவித்துள்ளார்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு 75 உழவு யந்திர மண் லோடுகளை பாரஊர்திகள் மூலம் கொண்டு சென்று ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைத்த செயற் திட்ட இணைப்பாளர், செல்வசந்நிதி ஆலய உற்சவத்திற்கு வருகைதரவுள்ள இலட்சக்கணக்கான பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆலயங்களின் தேவைகள் பூர்த்தி செய் யும் நோக்குடனும் மகேஸ்வரி நிதியம் இத்தகைய பணிகளை முன்னெடுத்துவருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் திருவிழாக் காலத்தில் அடியார்களுக்கு பயன் படக் கூடிய எத்தகைய உதவிகளை மேலும் வழங்கலாம் என் பது குறித்து ஆராய்ந்து வருவதுடன் வேண்டிய உதவிகளை மகேஸ்வரி நிதியம் வழங்கும் என்றும் செயற்திட்ட இணைப் பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் மணல் வழங்கப்பட்ட சமயம் யாழ். மாவட்ட மணல் விநியோக இணைப் புக்குழுவின் தலைவர் அரிஹரன், ஈழமக்கள் ஜனநாயகக்கட் சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் ஆலய நிர்வாகிகளும் பொது அமைப்பின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர். (ச-2,7)

# அந்தண சிரேஷ்டர்களுக்கு ஓர் அன்பு மடல்

அந்தண சிரேஷ்டர்கள் அத்தனை பேருக்கும் முதலில் அன்பு வணக்கம். சில வருடங்களுக்கு முன்பும் உங்களுக்குக் கடிதம் எழுதிய ஞாபகம்.

கடிதம் எழுதியதன் முடிவு எம்மீதான கோப மாகவே இருந்தது. பரவாயில்லை. சரியைச் சரி யெனவும், பிழையைப் பிழையெனவும் கூறிவிடு வது பாவத்திலிருந்து நாம் விடுபடுவதற்கான வழியாகும்.

எனவே சிலவற்றைக் கூறித்தான் ஆக வேண் டும். நேற்று முன்தினம் கீரிமலைக்குச் சென்றோம் ஆடி அமாவாசை. தந்தையார்க்கும் அவர்தம் மூத் தையர்க்கும் பிதிர்க்கடன் செய்யும் நாள்.

ஏகப்பட்டவர்கள் பிதிர்க்கடன் செய்யவந்திருந் தார்கள். கீரிமலை உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த போதிலும், அந்த புண்ணிய சமுத்திரத் தில் நீராடி பிதிர்க்கடன் தீர்க்க வேண்டும் என்ற பேரவா அவர்களிடமிருந்ததை காண முடிந்தது.

இதைப் பார்த்தபோது எங்கள் சைவ சமயத் திற்கும்–அதன் மீது கொண்ட நம்பிக்கைகளுக் கும் எந்தப்பழுதும் ஏற்படாதென்ற தென்பு உற்சா கத்தை தந்தது.

கீரிமலைக் கடலில் நீராடுவதற்கு முன்பதாக சிவாச்சாரியர்களிடம் தர்ப்பை பெற்றுக்கொள் வது வழக்கம்.

நீராடிய பின்பு அதே சிவாச்சாரியாரிடம் தந்தை யர் அவர் தந்தை அவரின் முன்னோரின் நாமங் களைக் கூறி, பிதிர்க்கடன் செய்ய வேண்டும்.

இந்தச் சடங்குகளை செய்த சிவாச்சாரியார் களின் ஒழுங்குமுறைகளை கண்டபோது வேதனை விக்கித்தது.

வருமானம் ஈட்டுவதைத்தவிர வேறு எதுவும் அவர்களின் சிந்தையில் இருக்கவில்லை. மனம் அங்கலாய்த்துக் கொண்டது. அவருக் குத் தர்ப்பை கொடுப்பது, இவரைச் சமாளிப்பது, மற்றவருக்கு சைகை காட்டுவது இப்படியாக சிவாச்சாரியர்கள் நடந்து கொண்டனர்.

இவர்களிலும் ஒருசிலர் இறைநம்பிக்கையோடு பிதிர்க்கடனை சரியாக நிறைவேற்றும் குருவாக இருந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இதற்கப்பால் கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வர பெருமானுக்கு தீர்த்த மண்டபத் தில் அர்ச்சனை நடந்தது.

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இளை ஞன் ஒருவன் ஐம்பது ரூபாயை கொடுத்து மோட்ச பூசை என்றான்.

இளம் அர்ச்சகர் ஒருவர் பணத்தை எடுத்து பெட்டிக்குள் போட்டார். அவ்வளவுதான் வேறு எதனையும் அவர் கூறவில்லை.

இளைஞன் தனது தந்தையின் பெயரை சொல் வதற்காகக்காத்திருந்தான். அர்ச்சகர் அதைக்கண்டு கொள்ளவில்லை அவ்வளவுதான். நகுலேஸ் வரப் பெருமானைபார்த்துவிட்டு இளைஞன் அந்த இடத்தைவிட்டு வெளியேறினான்.

அந்த இளம் அர்ச்சகர் வாயில்போட்ட சுவிங்கத் துக்காக அலகை அசைத்துக்கொண்டே இருந் தார்.

நிலைமை இதுவாயின் இன்னும் மூன்று ஆண்டுகளில் ஆடி அமாவாசைக்காக மக்கள் கீரி மலைக்கு செல்லமாட்டார்கள். மாறாக கிணற்று நீரில் அள்ளித்தோய்ந்து பிதிர்க்கடன் செய்து கொள்வர்.

மக்களின் சமய நம்பிக்கைகளுக்கேற்ற வாறு சிவாச்சாரியர்கள் நடந்துகொள்ளா விட் டால் சமய நம்பிக்கையிலிருந்து மக்கள் விலகிக் கொள்வர்.

இதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

தயவு செய்து இது தொடர்பில் நடவடிக்கை எடுங்கள். இதை எழுதியமைக்காக எம்மை மன் னியுங்கள். நன்றி.

# கிழக்கைப் போன்று யாழ்ப்பாணத்திலும் சிவில் சட்டம் வலுப்படுத்தப்படும்

## யாழ். பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சிவில் சட்டமானது கிழக்கு மாகாணத்தைப் போன்று மேலும் வலுப்படுத்தப்படும் என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் நேவின் பத்மதேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிபுற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் சுமுகமான சமாதான நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் பொது மக்கள் பயம் அற்றவர்களாக வாழ வேண்டும். இதற்காக யாழ்ப்பாண பொலிஸார் தமது அளப்பரிய சேவையினை மேற்கொள்ள முன்வந்துள்ளனர்.

இதனடிப்படையில் சட்டத்தை சீர் குலைப்போருக்கு எதி ராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இதன் முதற்கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட நட வடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 180 பொலி ஸாரும் அவர்களுக்குத் தேவையான வாகனங்களும் பயன் படுத்தப்பட்டது. மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பாரிய குற்றங்களை விளைவித்தவர்கள், மறைந்திருந்த பிடியாணைக்குரியவர்கள், சட்டவிரோத மது மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்தவர்கள், திருடர்கள் உட்பட 66 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங் களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கை கள் யாழ்ப்பாணத்தில் விரிவு படுத்தப்பட்டு பொதுமக்களின் பாதுகாப்புக்கு பொலிஸார் உறுதுணையாக இருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-7)

# யாழில் இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம்

(யாழ்ப்பாணம்)

இணைப்புப் பெற்று யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி வலயத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கான ஆவணி மாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியலில் கை யொப்பம் இடும் செயற்பாடு நாளையும் நாளை மறுதினமும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடை பெறும்.

சம்பளப்பட்டியலில் கையொப்பமிட வரும்பொழுது தாங் கள் இறுதியாக பெற்ற இணைப்புக்கடிதத்தினையும் அக்கடிதத் திற்கமைய கடமையேற்ற கடிதத்தினையும் கொண்டு வரு மாறு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள் ளார். (ச)

# வீதிகளில் அனுமதியின்றி பந்தல் அமைக்கத்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அனுமதியின்றி வீதி களில் பந்தல்கள் அமைக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளான குருநகர், பாசையூர் மற்றும் நாவாந்துறை போன்ற பகுதிகளில் இடம்பெறும் மங்கல நிகழ்வின் போது, அங்கீகாரமற்ற முறையில் வீதிகளில் பந்தல்கள் அமைக்கப் படுவதனால் வாகனப்போக்குவரத்திற்கும், பாதசாரிகளுக்கும் நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தாது,

அவற்றை அமைப்பதற்கான அனுமதியினை முன்கூட் டியே யாழ். மாநகரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண் டும் என யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் வாடகைப் பந்தல் உரிமையாளர்கள் தாம் பந்தல்களை அமைப்பதற்கு முன்னர் யாழ். மாநகர சபையிடமிருந்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (ச-2)

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சைக்கான திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சை கள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றைய தினம் இடம்பெறமாட்டாது எனவும் அவ் எழுத்துப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும் எனவும் குறிப்பிடப் படுகிறது.

இப் பரீட்சைகள் முன்னர் அறிவிக்கப்பட்ட நேர அட்ட வணைக்கமைய அன்றைய தினமும் நடைபெறும் என யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறி வித்துள்ளது. (2-4)

# செயலமர்வு இடமாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் சிரேஷ்ட பிரிவு மாணவர்க ளுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறவிருந்த ஆங்கில பாட செயலமர்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை சாவகச் சேரி கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகு மென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார். (2-2)

# சுவாமி விவேகானந்தரின் ஆசிமொழிகள்



❖ மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறானோ, அந்த அள வுக்கு கடுமையான சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து வந்தாக வேண்டும்.

❖ முற்காலத்தில் தியாகம் தான் வாழ்க்கைக்கு உரிய விதியாக இருந்தது. ஆனால் இப்போது அதிலிருந்து நாம் மிகவும் விலகி விட்டோம்.

❖ பகை, பொறாமை போன்ற தீயகுணங்களை வெளி யிடும் ஒருவன், அவற்றை வட்டியும் முதலுமாக மீண்டும் பெற்றுத்தான் ஆகவேண்டும்.

❖ புனிதமான எண்ணங்களையே சிந்தித்தபடி நன் மையைச் செய்து கொண்டிருங்கள். தீய சமாச்சாரங்களை தலை காட்டாதபடி அழுத்தி வைப்பதற்கு அதுவே வழி.

❖ வாழ்வில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் அளவற்ற நேர்மையும் அக்கறையும் கொண்டவராக இருக்கிறார் கள். இந்தக் குணங்கள் இல்லாமல் ஒருவர் வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்க முடியாது.

❖ அறிந்தோ, அறியாமலோ நீங்கள் செய்த தவறு களை வாழ்த்துங்கள். அந்தத் தவறுகளே உங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

# பாகிஸ்தானில் கடும் வெள்ளப்பெருக்கு 60 இலட்சம் மக்கள் பாதிப்பு

பாகிஸ்தானில் பல கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் உடைமைகளை இழந்துள்ளனர். மோசமான காலநிலை நிலவுவதால் ஹெலிகொப்டர் பறக்க முடியவில்லை. இதனால் நிவாரணப் பணி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்களுக்கு நிவாரணப் பொருளே கிடைக்கவில்லை. அவர்களது நிலை குறித்து சரிவரத் தெரியவில்லை என்றும் ஐ.நா. கூறியுள்ளது.

கைபர் , புஹ்துங்வா , பஞ்சாப் மற்றும் தெற்கு சிந்து ஆகிய மாகாணங்கள் தான் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இங்கு தரை வழியாககூட நிவாரணப் பணியை மேற்கொள்ளுதல் சிரமமாக உள்ளதாக பாகிஸ்தானுக்கான ஐ.நா. நிவாரணப் பணி ஒருங்கிணைப்பாளர் மார்ட்டின் மோங்வன்ஜா தெரிவித்துள்ளார்.

கைபர் மற்றும் புஹ்துங்வா மாகாண பகுதியில் மட்டும் சுமார் 6 இலட்சம் பேருக்கு நிவாரணப் பொருள் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் உணவு உட்பட அத்தியாவசியப் பொருள் கிடைக்காமல் சிரமப்படுவதாக ஐ.நா. வின் பேரிடர் மேலாண்மை நிபுணர் டென்னிஸ் புரூன் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வரலாற்றில் இது போன்ற வெள்ளப் பெருக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பும் கடுமையாக உள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைக்க அந்நாட்டுக்கு கோடிக்கணக்கான நிதி தேவைப்படுகிறது என்று ஐ.நா. கூறியுள்ளது.

இதனிடையே வெள்ள நிவாரணப் பணிக்கு உலக நாடுகள் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸ கிலானி கோரியுள்ளார்.

வெள்ள நிவாரணப் பணியை பாகிஸ்தான் அரசு முறையாக மேற்கொள்ள வில்லை என்று பரவலான குற்றச்சாட்டு எழுந்துள்ளதை மறுத்துள்ள கிலானி பாகிஸ்தான் அரசு இயன்றவரை நிவாரணப் பணியை துரிதமாக மேற்கொண்டுள்ளது என்றார். எனினும் வெள்ளத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதால் உலக நாடுகளின் உதவியை பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது என்றும் அவர் கூறினார். (5-4)

# காஷ்மீரில் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டது

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலம் லே பகுதியில் பெய்த பேய் மழையினால் நிலச்சரிவு ஏற்பட்டு 150 க்கும் மேற்பட்டோர் கடந்த நாட்களில் பலியானார்கள். இந்த நிலையில் காஷ்மீரில் உள்ள மாசு என்ற இடத்தில் பலத்த மழையினால் நிலச்சரிவு ஏற்பட்டது.

அந்த பகுதியில் மாச்சேல் மாதா என்ற கோவில் உள்ளது. அங்கு சென்ற 8 பக்தர்கள் நிலச்சரிவில் சிக்கி கொண்டனர். அதில் ஒருவர் பலியாயுள்ளதுடன் 7 பேர் காயம் அடைந்தனர். (5-4)

# ரஷ்யாவில் வரலாறு காணாத வெயில்; உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(மாஸ்கோ)

ரஷ்யாவில் காட்டுத் தீயால் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத கடுமையான புகை மூட்டத்தால் பலியானோர் எண்ணிக்கை 104 ஆக அதிகரித்துள்ளது. ரஷ்யாவில் இதுவரை வரலாறு காணாத அளவுக்கு இந்த ஆண்டு கடுமையான வெயில் கொளுத்துகிறது.

அதனால் ஏற்பட்ட வெப்பத்தினால் காடுகளில் தீப்பிடித்தது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மளமளவென்று பரவிய தீயால் மொஸ்கோ நகரமே புகை மூட்டத்தில் தத்தளித்து வருகிறது.


கடந்த ஜூலை மாத இறுதி வரையில் 52 பேர் புகை மூட்டத்தால் சுவாசிக்க முடியாமல் பலியாகியுள்ளனர். இந்நிலையில் புகை மூட்டத்தால் பலியானோர் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக அலக்சாண்டர் செல்ட்சோவ்ஸ்கி என்ற அதிகாரி கூறியதாக ,

இன்டர்பாக்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் கொளுத்தும் வெப்பம் மற்றும் புகைமூட்டத்தால் எத்தனை பேர் பலியாகியுள்ளனர் என்ற சரியான தகவலை அந்நாட்டு அதிகாரிகள் கூறவில்லை. இருப்பினும் இயல்பான நிலையை விட பலி எண்ணிக்கை அதிகரித்து இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.,

ஆனால் ஒட்டு மொத்தப்பலி எண்ணிக்கையை வெளியிட அரசு விரும்பவில்லை மொஸ்கோவிலுள்ள டாக்டர் ஒருவர் கடந்த வாரம் தன்னிடம் வந்த நோயாளிகள் அனைவரும் உணவு ம்ற்றும் சுவாசப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அந்நகரில் உள்ள மற்றொரு பெரிய மருத்துவமனை நிர்வாகம் நோயாளிகளின் நோய்க்கும் வெப்பத்துக்கும் முடிச்சு போடக்கூடாது என்று டாக்டர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (5-4)

# சிறையிலிருக்கும் சீமான் புத்தகம் எழுதுகிறார்



வேலூர் சிறையில் இருக்கும் சீமான் தமிழினம் பற்றிய புத்தகம் எழுதுகிறார். நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் , இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.


தன்னை தண்டனையில் இருந்து விடுவிக்க கோரி சென்னை நீதிமன்றில் சீமான் மனுதாக்கல் செய்துள்ளார். இம் மனு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் நாம் தமிழர்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

சீமானுக்கு தமிழினம் தொடர்பாக புத்தகம் எழுதும் திட்டம் இருந்தது. ஆனால் ஓய்வு இல்லாததால் எழுத முடியவில்லை.

தற்போது சிறையில் பல்வேறு நூல்களை படிப்பதிலும் குறிப்பு எடுப்பதிலும் முழுக்கவனம் செலுத்தி வருகிறார். புத்தகம் ஒன்றை யும் எழுதத் தொடங்கியுள்ளார்.

தமிழ் தேசியத்துக்கு ஏற்பட்டுள்ள பின்ன டைவு தமிழினம் ஏன் ஒடுக்கப்பட்டது? தமிழர்கள் எப்படி தங்கள் இனத்தை மறந்தார்கள்? என்பது போன்ற வரலாற்று செய்திகளுடன் இந்த நூலை எழுதுகிறார். அவர் சிறையில் இருந்து வெளியே வந்த பின்னர் புத்தகம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# சந்திரனில் தண்ணீர் இல்லை ; அமெ.ஆராய்ச்சியாளர்கள் தகவல்



சந்திரனில் தண்ணீர் உள்ளது. என சமீப கால ஆய்வுகள் தெரிவித்தன. இந்தியா அனுப்பிய சந்திராயன்-1 செயற்கை கோள் நடத்திய ஆய்வில் சந்திரனின் வட துருவத்தில் தடிப்பான பனிப்பாறை படிவங்கள் இருப்பது தெரியவந்தது. மேலும் அங்கு போதிய அளவு தண்ணீரும் கனிமவளங்களும் இருப்பதாக மற்ற ஆய்வுகள் கூறி வந்தன.

தற்போது சந்திரனில் போதுமான அளவு தண்ணீர் இல்லை அங்கு வறண்டு கிடக்கிறது. என அமெரிக்கா ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். சந்திரனில் இருந்து எடுத்து வரப்பட்ட குளோரின் ஓரக கனிமங்கள் (ஐசோடோப்) ஆய்வு செய்யப்பட்டன. அதில் சிறிதளவு கூட ஹைட்ரஜன் இல்லை. எனவே அங்கு தண்ணீா் இருக்க வாய்ப்பு இல்லை. இதனால் அங்கு மக்கள் வாழக் கூடிய சூழ்நிலை இல்லை என்று தெரிவித்துள்ளார். (5-4)

# சனி,செவ்வாய்,வெள்ளி கிரகங்களை முக்கோண வடிவில் அருகருகே பார்க்கலாம்

செவ்வாய்,வெள்ளி,சனிக்கிரகங்கள் முக்கோண வடிவில் அருகருகே தெரியும் அற்புதக் காட்சியை விரைவில் மாலை நேரத்தில் வானத்தில் பார்க்கலாம் என விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

வானில் விரைவில் இந்த அதிசயக் காட்சி ஒன்று அரங்கேறப்போகிறது.செவ்வாய், வெள்ளி, சனிக்கிரகங்கள் வானில் அருகருகே முக்கோணவடிவத்தில் காட்சியளிக்கும் .இதை 15 நாட்களுக்கு தினமும் மாலையில் சூரிய அஸ்தமனத்துக்குப் பின் மேற்குத் திசையில் பார்க்கலாம்.

இந்தக்கிரகங்கள் அருகருகே இருப்பது போல காட்சியளித்தாலும் அவை நீண்ட தொலைவில் உள்ளன.பூமியில் இருந்து வெள்ளிக்கிரகம் 11.38 கோடி கி.மீ தூரத்திலும் செவ்வாய்க் கிரகம் 30.6 கோடி கி.மீ தூரத்திலும் சனிக்கிரகம் 153 கோடி கி;மீ தூரத்திலும் இருக்கின்றன.

இதில் மற்றக் கிரகங்களை விட வெள்ளிக் கிரகம் பூமிக்கு அருகில் இருப்பதால் பிரகாசமாகத் தெரியும்.3 கோள்களுக்கு அருகிலே யே நாளை பிறை சந்திரன் காட்சியளிக்கும்.இந்த அற்புதக் காட்சிகளை பைனாகுலர் உதவியுடன் தெளிவாகப் பார்க்கலாம் என்று கொல்கத்தா பிர்லா கோளரங்க இயக்குனர் டி.பி தாரி கூறினார். (5-4)

# கிரீன்லாந்தில் உருகும் இராட்சத பனிப்பாறை

(வோஷிங்டன்)

வடஅமெரிக்கா கண்டத்தில் கிரீன்லாந்து நாடு உள்ளது.இதன் பெரும்பகுதி பனிக்கட்டிகளால் சூழ்ந்துள்ளது.எனவே இங்கு அதிகளவில் மக்கள் வசிக்கவில்லை.ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே உள்ளனர்.

தற்போது அங்குள்ள பீட்டர் மேன் என்ற பனிப்பாறை உடைந்துள்ளது.இதிலிருந்து பிரிந்த அந்த இராட்சத பாறை உருகத் தொடங்கியுள்ளது.அது 100 சதுர மைல் பரப்பளவு கொண்டது.அமெரிக்காவின் எம்பயர் கட்டட அளவு உயரமாக உள்ளது.

ஒரு குட்டி ஐஸ்தீவு போன்று இது காட்சியளிக்கிறது.அமெரிக்காவின் மேன்காட்டன் நகரை போன்று 4 மடங்கு பெரியது . இதிலிருந்து உருகி ஓடி வரும் தண்ணீரினால் அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

இராட்சத பனிப்பாறை உடைந்து உருகுவதை நெலாவர் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர் அன்ட்ரூவ் மியூன்கள் தெரிவித்தார்.நாசா செயற்கை கோள் மூலமும் இது தெரியவந்தது.

கிரீன்லாந்து பனியாற்றில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பல ஜஸ்கட்டிகள் உருகுகின்றன.தற்போது தான் இராட்சத அளவிலான பனிக்கட்டி உருகியுள்ளது.உலக வெப்பமயமாதல் காரணமாக இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். (4-6)



ஜப்பானின் , நாகசாகி இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்காவால் அணு ஆயுதத்தால் தாக்கப்பட்டது. இதன் 65 ஆவது நினைவு தினத்தில் ஜப்பான் நாட்டு பிரதமர் நாட்டோ கன் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

# இந்தியா 88 ஓட்டங்களுக்கு சரிந்தது நியூசிலாந்து 200 ஓட்டங்களால் வெற்றி



(தம்புள்ள)

சகல துறையிலும் ஜொலித்த நியூசிலாந்து அணி 200 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இலங்கை, இந்தியா, நியூசிலாந்த அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நேற்று தம்புள்ளவில் ஆரம்பமானது.

இதில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்திய,நியூசிலாந்து அணிகள் மோதின இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் சறுகியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் குப்தில் 11, இங்க்ராம் 12 ஓட்டங்களுடனும் வில்லியம்ஸன் பூச்சியத்துடன் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 6.5 ஓவர்களில் 28 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை பறிகொடுத்து தடுமாறியது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்லர்–ஸ்ரைரிஸ் ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கி நியூசிலாந்து அணியை சரிவிலிருந்து மீட்டு கௌரவமான நிலைக்கு தூக்கி நிறுத்தினர்.

இதில் ஸ்கொட் ஸ்ரைரிஸ் 95 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 89 ஓட்டங்களையும் அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் 113 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 95 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசை வீரர்கள் சோபிக்காத நிலையில் நியூசிலாந்து அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 288 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தௌப்பி 13 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 19 ஓட்டங்களையும் ஓரம் 14, ஹோப் கிங்ஸ் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அஷிஸ் நெகரா 4 விக்கெட்டுக்களையும் பிரவின் குமார் 3 விக்கெட்டுக்களையும் பிரக்ஜன் ஓஜா, யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



பதிலுக்கு 50 ஓவர்களில் 289 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக்–கார்த்திக் ஜோடி சிறப்பான ஆரம்பம் தந்தனர்.

எனினும் வீரேந்திர சேவாக் 23 பந்துகளில் 3 பவுண்டரிகள் உட்பட 19 ஓட்டங்களுடனும் டினேஸ் கார்த்திக் 20 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 14 ஓட்டங்களையும் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 7.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் களமிறங்கிய ரோகித் சர்மா 04, ரெய்னா 06, அணித்தலைவர் தோனி 02, யுவராஜ் சிங் 05 என ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 16.5 ஓவர்களில் 62 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 6 விக்கெட்டுக்களை பறிகொடுத்து திணறியது.

பின்வரிசை வீரர்களும் சோபிக்காத நிலையில் இந்திய அணி 29.3 ஓவர்கள் 88 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 200 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ரவீந்திர ஜடேஜா 20 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் தௌபி 3 விக்கெட்டுக்களையும் மில்ஸ், ஓரம் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் மைக்கே, வில்லியம்ஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி தொடரில் 5 புள்ளிகளை பதிவு செய்தது. இப் போட்டியில் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் தெரிவானார்.

இத் தொடரில் நாளை மறுதினம் தம்புள்ளவில் நடைபெறும் இரண்டாவது போட்டியில் இலங்கை–நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

## 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

(மன்னார்)

பாடசாலை மட்ட 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி அணியை வீழ்த்தியது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மட்ட 17 வயதுக்குட்டோர்களுக்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் பிரிவு 3 ஐக் சேர்த்த மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதிய போட்டி நேற்று முன்தினம் மன்னார் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப் பெடுத்தாடிய மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி 37.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 118 ஓட்டங்களை எடுத்தது.

இதில் எஸ்.அமோஸ் 85 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களையும் வி.தனராஜா 57 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களையும் வி.மில்ரன் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துகளில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பாக என்.பென்ஜமின் நிருஷன் 7 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வி.கோபிநாத் சுவன், என்.கஜேந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 21.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 119 ஓட்டங்களைக் குவித்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் எம்.மதுஷன் 21 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களையும் எஸ்.தனஞ்சஜன் 36 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 25 ஓட்டங்களையும் என்.பென்ஜமின் நிரூசன் 18 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 19, வி.சிவசங்கர் ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மன்னார் சென் சேவியர் ஆண்கள் பாடசாலை சார்பில் வி.தனராஜா, வி.மில்துன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.






**போய் கொண்ட கங்கம்மா ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை சோதிட வல்லுனர்

கே.ரவிக்குமார் சாஸ்திரி
0770790898

கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை

**குறைந்த செலவில் கூறுவார்**

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினைகள், விசேட பயணம், எதிரிகள் கண் திருஸ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல்.

இவற்றினை தெரிந்து கொள்ள ஒரு முறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

**திலக் லொச்** அறை இல: 01

711, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி சந்தி)

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.30 மணிவரை

(2139)


## யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சட்டத்தகவல் செஞ்சிலுவைச்சங்க தளம் அமைப்பு

(கொழும்பு)

உலகில் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையின் கீழ் 8 ஆயிரம் பக்கங்கள் கொண்ட மனிதாபிமான சட்டத் தகவல்கள் தளம் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் குழு ஆரம்பித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கக் குழுவின் பிரித்தானியக் கிளையின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள இத்தளத்தில் சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆயுதக் கலவரங்கள் நீதிமன்ற தீர்ப்புக்கள் சட்ட வியாக்கியானங்கள் போன்ற தகவல்கள் அனைத்தும் அடக்கப்பட்டுள்ளன.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள சர்வதேச மனிதாபிமான சட்டங்களில் தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுநர் குழுவின் பங்களிப்புடன் இந்த தகவல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் ஆயுதக் கலவரங்களில் பாதிக்கப்பட்டோருக்கான சட்ட ரீதியான தகவல்கள் ஆகியவற்றைப் படித்து இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இந்த புதிய தகவல் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வியாளர்களும் கட்டவல்லுனர்களும் தங்களுக்கு தேவையான மனித உரிமை சட்டங்கள் குறித்த தகவல்களை எளிதாகவும் துல்லியமாகவும் விபரத்துடன் பெற முடியும் என்பது திண்ணம்.

சர்வதேச மனித உரிமை சட்டங்களை பயன்படுத்தும் சட்ட வல்லுனர்களுக்கும் பிறருக்கும் இச் சட்டங்களை எளிதில் கிடைக்கச் செய்கின்றமையில் இத்தளம் காத்திரமான பயன்பாட்டைக் கொண்டுள்ளது.

சிறுவர் போராளிகள்–போர்களில் சிறுவர்களை பயன்படுத்துகின்றமை–அதற்கான தண்டனைகள்–போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான மனிதாபிமான சட்டங்கள் ஆகியன குறித்தும் இதில் விரிவாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சண்டைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்குள் தொடர்பான அனைத்து தகவல்களும் இங்கு கிடைக்கும்.

உலகின் ஒவ்வொரு நாட்டுச் சட்டங்களுக்கான விளக்கங்களும், தகவல்களும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. சர்வதேச அளவில் மனிதாபிமான சட்டங்களுக்கென இருக்கும் சில எழுதப்படாத விதிமுறைகளையும் உள்ளடக்கி உள்ளது. இந்த தகவல் தளம். போரினால் பாதிக்கப்பட்டோரை நடத்தப்பட வேண்டிய முறைகள் குறித்து இதில் அழகாக விபரிக்கப்பட்டுள்ளது. இத்தளம் இரு பகுதிகளை கொண்டது.

161 மனிதாபிமான சட்ட விதிகளைக் கொண்டது முதல் பகுதி. இரண்டாம் பகுதியில் முதல் பகுதியில் உள்ள சட்டங்களை மையப்படுத்திய பிற விபரங்கள் தகவல்கள் அனைத்தும் இருக்கின்றன. இவை தவிர புதிய சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் குறித்த தகவல்களும் 2007 வரையிலான கால கட்டங்களில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான சட்டங்கள் குறித்த தகவல்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

இத்தளத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் உத்தியோக பூர்வ இணையத் தளத்தில் நாளை முதல் பார்வையிட முடியும். (ச–5)

## விசேட கல்வித்தேவையுடைய மாணவருக்கான சிறுவர்முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்விபயிலும் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர்முகாம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதில்விசேடதேவையுடைய மாணவர்களையும்அவர்களின் பெற்றோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)


**வேலை ஆட்கள் தேவை**

புடவை விற்பனை நிலையத்திற்கு 2 பெண் பிள்ளைகளும் ஒரு ஆணும் தேவை. அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புக்கு :-

**லைடன் புடவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் (முன்பாக) யாழ்ப்பாணம்.

தொ.பேசி இல. 0212222381

(C-837)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் யுவதி மயக்கமடைந்த நிலையில் மீட்பு

## துன்னாலையில் நேற்றுப் பரபரப்பு

துன்னாலைக் குடவத்தைப் பகுதியில் இளம் யுவதி ஒருவர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற் றுள்ளது. சம்பவம் தொடர்பாகத் தெரிய வரு வ்தாவது,

துன்னாலை குடவத்தை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் நேற்று அதி காலை 2.30 மணியளவில் இளம் பெண்ணின் அவலக் குரல் கேட்டுள்ளது.

எனினும் அப் பகுதி மக்கள் பயம் காரணமாக அங்கு செல்லவில்லை. இந் நிலையில் நேற்றுக் காலை நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் மயக்கமடைந்த நிலையில் பிரஸ்தாப யுவதியை மீட்டு மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பிரஸ்தாப யுவதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் எவ்வாறு சம்பவ இடத்திற்குச் சென்றார் என்பது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-24)

## பிரபா கணேசனின் கட்சிப்...

காங்கிரஸ் தொழிற் சங்கத்தின் நிதிச் செயலாளர் பதவிக்கு மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளிரகுநாதனும் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு விடுத்துள்ளசெய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை கட்சித் தலைமையகத்தில் தலைவர் மனோ கணேசனின் தலைமையில் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

பிரபா கணேசன் மீதான கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தம், நேற்று முன்தினம் 14-வது நாளான எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முதல் அரசிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அறிவுறுத்தல், அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறும் விதத்தில் அரசுடன் இணைந்து ஆதரவாக வாக்களிக் கக் கூடாது என்ற அறிவுறுத்தல், ஒழுங்கு நட வடிக்கை தொடர்பிலான பத்து உறுப்பினர் கள் அடங்கிய ஒழுக்காற்றுக் குழு ஆகியவை தொடர்பில் கட்சித் தலைவர் மனோ கணேசனும் பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரனும் எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் அரசியல் குழு உறுப்பினர்கள் ஏக மனதாக அங்கீகரித்தனர். இதைத் தொடர்ந்து பிரபா கணேசனின் தேசிய அமைப்பாளர் பதவிக்கு மேல் மாகாண் சபை உறுப்பினர் எஸ்.இராஜேந்திரனின் பெயரைத் தலைவர் மனோ கணேசன் பிரேரிக்க குழு ஏக மனதாக ஏற்றுக் கொண்டது என்றுள்ளது. (ச-5)


# 20-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 09 1937

இறப்பு 23 07 1990

அமரர் வேலுப்பிள்ளை இளையதம்பி இரத்தினேஸ்வரன் (திதி: துதியை-11.08.2010)

காலத்தின் நீரோட்டத்தில்
காலன் உம்மை அழைத்தான்
ஞாலத்தில் பிரிவுத் துயர் தந்து
எங்கள் நெஞ்சில் நிறைந்தாய்

271/1A, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்:ரமேஷ் (G.S.), Dr.சுரேஷ், சுதர்ஷன் (மென்பொருள் பொறியியலாளர்)

(2143)


## உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில்...

இன்னும்-போர் முடிந்த பின்னும் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு ஊர் இழந்தவர்கள் அகதிகளாக அவலப்படுகின்றனர்.

எல்லா இடங்களிலும் இயல்பு வாழ்வு மீளத் திரும்பும்போது இவர்கள் மட்டும் ஏதிலிகளாகவேயுள்ளனர்.

எனவே இந்த மக்களின் வாழ்வை முன்னரைப்போன்று வளமான நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டிய பொறுப்பு அரசுக் குண்டு. இதற்கு வசதியாக உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் முடங்கிக் கிடக்கும் வயற்காணிகளில் விவசாயிகள் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட அனுமதிக்க ஆவன செய்ய வேண்டும்.

அத்துடன் குடாநாட்டில் கண்ணி வெடி அகற்றப்பட்ட இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்தவும் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

இக் கோரிக்கைகளை விரைவில் பரிசீலித்து நிறைவேற்றுவதாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி கத்துருசிங்க உறுதியளித்தார் என் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூறியுள்ளார். (ச-5)

## ஜீப் ஆற்றில்...

படுகாயமடைந்த நிலையில் கல்வானை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுப் பின்னர் இரத்தின புரி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பல அடி உயரத்திலிருந்து இந்த ஜீப் ஆற்றில் விழுந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் விபத்துக்கான காரணம் என்ன என்பது உட னடியாகத் தெரிய வரவில்லை. (ச-5)

## பிரதி அமைச்சர் மேர்வின்...

மரத்தில் கட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிராக நாடெங்கிலும் சமுர்த்தி ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் மேர்வின் சில்வாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அரசாங்கத்தை அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதேவேளை அண்மையில் சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தில் கட்டிய சம்பவம் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயற் குழு, மேர்வின் சில்வாவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. (ச-5)

## இராணுவ...

இராணுவ நீதிமன்றில் சாட்சிய மளித்துள்ளார்.எவ்வாறெனினும் ஜெனரல் சரத் பொன் சேகாவின் சார்பில் எந்த வொரு சட்டத் தரணியும் நீதி மன்றில் ஆஜராகவில்லைஎனத்தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது நாளாகத் தொடர் ந்து ஜெனரல் சரத் பொன்சேகா சார்பில் எவரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது. (ச-5)

## ஐ.நா. சபை செயலருக்கு...

மூனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

செயலாளர் நாயகத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும் என முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுவதாக குறித்த சிங்களப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆப்கான் படையினரால் லூயிஸ் மெக்வல் என்ற ஐக்கிய நாடுகள் அதிகாரி படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பில் பான் கீ மூன் இதுவரையில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லைஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான நடவடிக்கையிலிருந்து மீளும் நோக்கில் பான் கீ மூன் இரண்டு அதிகாரிகளை நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இடம்மாறும் ஐ.தே.க. எம்.பிக்...

எதிர்க்கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வாரம் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நேற்று முற்பகல் மீண்டும் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இதற்கு முன்னர் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறை திருத்தங்கள் உள்ளிட்ட அரசியல் அமைப்புத் திருத்தங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டாம் என அந்தக் கட்சியின் தவிசாளர், நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தொடர்ந்தும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என ஜனாதிபதி எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கு உறுதி வழங்கியிருந்தார். ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்புக் குறித்துக் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம், ஜனாதிபதியை மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு திகதி ஒன்றை வழங்குமாறு ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருந்ததாகவும் நாளை திகதி ஒன்றை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைத் திருத்தங்கள் உள்ளிட்ட அரசியல் அமைப்பத் திருத்தங்கள் மாத்திரமல்லாது அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் விடயங்களை அறிந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் முக்கியமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்படும்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளப்படுவார்களானால் அரசாங்கத்துடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் எந்தப் பலனும் இல்லை என கபீர் காசீம் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஈர்த்துக் கொள்ளப்படுவதால் எதிர்க்கட்சி பலவீனமடையும்.

எதிர்க்கட்சியினரை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்வதில்லை என உறுதி வழங்கி அதனை மீறினால் என்ன செய்யப் போகின்றீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

எதிர்காலத்தில் அவ்வாறு செயற்பட முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவான ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் பி.திகாம்பரம் ஆகியோர் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தமை பெரும் சர்ச்சையையும் பல கேள்விகளையும் எழுப்பியுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


# மரண அறிவித்தல்



## குணரத்தினம் குகவதி

துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் குகவதி 09.08.2010 திங்களன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், குணரத்தினத்தின் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர், கிளிநொச்சி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேசன் (துன்னாலை) மற்றும் மகேசன் (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்), செல்வநாயகம் (சோதிடர், வவுனியா), குணவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை, கிளிநொச்சி), விமலாவதி(கொழும்பு), கதிரவேலு (ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர், உரும்பிராய்), கமலாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

குணசீலன் (ஜேர்மன்), அனுரா (கனடா), குகநேசன் (கனடா), கௌசலா (ஆசிரியை, கொழும்பு), லக்ஸ்மணஸ்ரீ (பொறியியலாளர், ஓமான்), ரமணன் (செலிங்கோ இன்சுரன்ஸ், சுன்னாகம்), ஜீவிதா (வெளிவாரி மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

சற்குணதாஸ் (கனடா), வனிதா (கனடா), உமாசங்கர் (உயிரியல் ஆசிரியர், கொழும்பு), அகல்யா (மேம்படுத்தல் உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்), சுகந்தினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், நெல்லியடி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அனுஷா, நிரோசன், ஜெனிசா (கனடா), சாரங்கன், தாரகா, ராதிகா (கனடா), சாம்பவி, அபிலா (கொழும்பு), அகர்சன், அத்மிகா (மட்டுவில்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41/66, வைத்தியசாலை முன் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி.:- 077 9773002

தகவல்:
குடும்பத்தினர்

(C-835)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.